Registered as a news paper.
பக்கங்கள்: பன்னிரண்டு+II
விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

MANOJ AIR TRAVELS
MANOJ EXPRESS
The Finest Express Service in the Field
உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்களுக்கும்
பார்சல் மற்றும் தபால் சேவைகளுக்கும்
இல. 32, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(பொலிஸ் நிலைய வீதி, யாழ்ப்பாணம்)
021 222 3916, 0777 801038

மலர்:03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 சித்திரை– 17 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ற–அவ்வல் 20 (30.04.2005) சனிக்கிழமை இதழ்:213

# கடத்தப்பட்ட சிவராம் படுகொலை;

# தியவன்ன ஓயாவில் சடலம் மீட்பு!







(கொழும்பு)

பம்பலப்பிட்டியில் வைத்து நேற்றுமுன்தினம் இரவு கடத்திச் செல்லப்பட் சிரேஷ்ட ஊடகவியலாளரும், பிரபல இராணுவ - அரசியல் ஆய்வாளருமான தர்மரட்ணம் சிவராம் படுகொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

உயர்பாதுகாப்பு வலயமான நாடாளுமன்றத்துக்குப் பின்புறமாக உள்ள தியவின்ன ஓயா - ஜப்பான் நட்புறவுப் பாலத்துக்கு அருகில் இவரது சடலம் நேற்றுக்காலை கண்டுபிடிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் இரவு 10.30 மணியளவில் கடத்திச் செல்லப்பட்ட இவர் - ஜப்பான் நட்புறவுப் பாலத்துக்கு அருகில் வைத்து தலையில் 9 மி.மீ. கைத்துப்பாக்கியால் சுடப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்.

நேற்று அதிகாலை 2 மணியளவில் இவர் சுட்டுக்கொல்லப்பட்டதாகத் தெரியவருகிறது.

முகத்தை துணியால் இறுகக்கட்டி - வாய்க்குள் துணிவைத்து அடைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்ட பின்னரே இவர் சுட்டுக்கொல்லப்பட்டதாகத் தெரியவருகிறது.

பாலத்துக்கு அருகில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சடலம் ஒன்று கிடப்பதாக தலங்கம பொலிஸாருக்கு அநாமதேய தொலைபேசி அழைப்பொன்று நேற்று அதிகாலை கிடைத்ததை அடுத்து பொலிஸார் அங்கு தேடுதல் நடத்தி நேற்றுக்காலை சடலத்தைக் கண்டுபிடித்தனர்.

சடலத்தின் அருகே இரண்டு வெற்று ரவைகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

சடலம் கிடந்த இடத்துக்குச் சென்ற சிவராமின் மனைவி எஸ்.யோகராணி (வயது 43), மகள் வைஷ்ணவி (வயது 16) ஆகியோர் சடலத்தை அடையாளம் காட்டினர். அவரது ஏனைய பிள்ளைகளான வைதேகி (வயது 13), சேரலாதன் (வயது 10) ஆகியோரும் உறவினர்களுடன் சம்பவ இடத்துக்குச் சென்றிருந்தனர். (12 ஆம் பக்கம் பார்க்க)

## தேசியத்துக்காக குரல் கொடுத்த ஊடகவியலாளர் சிவராம்!



படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் தர்மரட்ணம் சிவராம் (தராக்கி) - தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளிலும் அரசியல், இராணுவ ஆய்வுக் கட்டுரைகளை எழுதிவந்தார்.

மட்டக்களப்பைப் பிறப்பிடமாகவும் கல்கிசையை வசிப்பிடமாகவும் கொண்ட இவர் - மூன்று பிள்ளைகளின் தந்தையாவார்.

மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியில் தனது கல்வியை முடித்துக் கொண்ட டி.சிவராம் - 1980 ஆம் ஆண்டு யாழ். பல்கலைக்கழகத்தில் அனுமதி பெற்றிருந்தார்.

பல்கலைக்கழக மாணவராக இருந்த காலத்தில் புளொட் அமைப்பில் இணைந்து செயற்பட ஆரம்பித்தார். இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பின் னர் புளொட் அமைப்பு அரசியல் கட்சியாக பதிவுசெய்யப்பட்டபோது - அதன் செயலாளராக இருந்தவர்.

பின்னர் 1990 இல் புளொட் அமைப் பிலிருந்து விலகிய இவர், சுதந்திர ஊடகவியலாளராகச் செயற்பட ஆரம்பித்தார்.

1991 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் ஆனையிறவுத் தளம் மீதான முற்றுகைத் தாக்குதலை நடத்திய போது - தராக்கி என்ற பெயரில் ஐலன்ட் வார இதழில் முதலாவது இராணுவ ஆய்வுக் கட்டுரையை எழுதியிருந்தார்.

இதன்பின்னர் - ஐலன்ட், சண்டே ரைம்ஸ் மற்றும் டெய்லிமிரர் ஆகிய ஆங்கிலப் பத்திரிகைகளில் தராக்கி என்ற பெயரில் இராணுவ ஆய்வுக் கட்டுரைகளை எழுதிவந்தார்.

அத்துடன் - வீரகேசரி, சரிநிகர், தினக்கதிர் போன்ற பத்திரிகைகளில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஊடகவியலாளர் சிவராம் படுகொலை; தமிழீழ விடுதலைப் புலிகள் கண்டனம்!

(கிளிநொச்சி)

தமிழினத்தின் மிகச் சிறந்த ஊடகவியலாளரான தராக்கி டி.சிவராம் கொழும்பில் கடத்திக் கொல்லப்பட்டுள்ளார். அரசின் புலனாய்வுப் பிரிவும், அவர்களோடு சேர்ந்தியங்கும் தமிழ் விரோதக் குழுக்களுமே இந்தக் கொலைக்கு காரணமாகும். சிவராமின் இந்தக் கொலைச் சம்பவம் தமிழ்மக்களிடத்திலும் ஊடகவியலாளர்கள் மத்தியிலும் மிகப்பெரும் அதிர்ச்சியையும் கோபத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது என ஊடகவியலாளர் சிவராமின் கொலையைக் கண்டித்து தமிழீழ விடுதலைப் புலிகள் வெளியிட்டிருக்கும் கண்டன அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

அரசியற்துறை விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது -

தராக்கி என்றும் டி.சிவராம் என்றும் நன்கறியப்பட்ட தர்மரட்ணம் சிவராம் மிகத் துணிச்சலானதொரு ஊடகவியலாளர். எவ்வகையான நெருக்கடிச் சூழ்நிலைகளிலும் எதற்கும் அஞ்சாது துணிச்சலாக செய்திகளையும் கருத்துக்களையும் முன்வைத்து வந்தவர். கடந்த இரண்டு தசாப்த காலத்தில் சர்வதேசம் நன்கறிந்த சிறந்த தமிழ் ஊடகவியலாளராகச் செயற்பட்டு, தமிழ்மக்களின் பிரச்சினைகளை வெளியுலகிற்கு எடுத்துச் சொன்னவர். தனது ஊடகப் பணியினூடாக தமிழ்மக்களின் உரிமைப் போராட்டத்தை வெளியுலகத்துக்குத் தெரியப்படுத்த முனைந்து உழைத்தவர்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்துடன் தன்னை நீண்டகாலமாகவே தெளிவாகவும் உறுதியாகவும் பிணைத்திருந்தவர் சிவராம். சிங்களப் பேரினவாத அடக்குமுறைக்கு எதிரான போராட்டத்தில், எண்பதுகளின் தொடக்கத்திலிருந்து இணைந்து செயற்பட்டவர். அன்றிலிருந்து தனது இறுதிக்கணம் வரையிலும் தமிழின விடுதலையை நெஞ்சார விரும்பி தனது சிந்தனை (12 ஆம் பக்கம் பார்க்க)

## சிவராம் கொலையைக் கண்டித்து யாழ். பஸ்நிலையம் முன்பாக இன்று எதிர்ப்புப் போராட்டம்!

(யாழ்ப்பாணம்)

பிரபல இராணுவ, அரசியல் ஆய்வாளர் தர் மரட்ணம் சிவராம் (தராக்கி) படு கொலை செய்யப்பட்டதைக் கண்டித்து - இன்று யாழ்.மாவட்ட ஊடகவியலாளர்கள் யாழ்.பஸ் நிலையத்துக்கு முன்பாக எதிர்ப்புப் போராட்டம் ஒன்றில் ஈடுபடவுள்ளனர்.

கடந்த காலங்களில் மிகவும் கொடூரமான முறையில் இலங்கையில் பத்திரிகையாளர்கள் கொலை செய்யப்பட்டுவந்துள்ளனர். இவர்களின் வரிசையில் இராணுவ, அரசியல் ஆய்வாளரும் ஊடகவியலாளருமான தர்மரட்ணம் சிவராம் மிகவும் மோசமான முறையில் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்தும் - இவ்வாறான சம்பவங்கள் நடைபெறுகின்றபோது அரசாங்கம் அறிக்கை விடுவதுடன் இருந்துவருவதைக் கண்டித்தும் - இனிவரும் காலங்களில் பத்திரிகையாளர்களுக்கு பூரண சுதந்திரம் வழங்கப்படவேண்டும், அவர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவேண்டும் என்று வலியுறுத்தியும் இந்தப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

இன்று காலை 11.00 மணியளவில் யாழ். பஸ்நிலை(12 ஆம் பக்கம் பார்க்க)

## சிவராம் படுகொலை; ஜப்பான் கண்டனம்!

(கொழும்பு)

சிரேஷ்ட ஊடகவியலாளரான தர்மரட்ணம் சிவராம் படுகொலை செய்யப்பட்டமை குறித்து - ஜப்பானிய அரசாங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக - கொழும்பிலுள்ள ஜப்பானியத் தூதுவர் அகியோ சூடா வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது -

சிவராமின் படுகொலை - ஜனநாயகத்துக்கும் தனிமனித பேச்சு சுதந்திரத்துக்கும் விடுக்கப்பட்ட கடுமையான அச்சுறுத்தலாகும்.

ஜனநாயக சமுதாயத்தில் தனிமனித பேச்சுச் சுதந்திரம் ஒரு அடிப்படை உரிமை. இதைக் கட்டிக்காப்பதற்கு அனைத்துத் தரப்பினரும் கடு (12 ஆம் பக்கம் பார்க்க)

## சிவராம் கொலையை கண்டித்து குடாநாட்டில் இன்று துக்கதினம்!

பிரபல அரசியல் இராணுவ விமர்சகரும் பத்திரிகையாளருமான டி. சிவராம் கடத்திச்செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து இன்று யாழ்.குடாநாட்டில் பூரண துக்கதினம் அனுஷ்டிக்குமாறு தமிழ் தேசிய விழிப்புணர்வுக்கழகம் அழைப்பு விடுத்துள்ளது.

பத்திரிகையாளர் டி.சிவராம் அரச பேரினவாத சக்திகளின் அனுமதியுடன் இராணுவத்தினருக்குத் துணை போகும் குழுக்களாலும் திட்டமிட்டுச் செய்யப்பட்ட படுகொலை இது.

பத்திரிகையாளர் நிமலராஜன், நாட்டுப் பற்றாளர் நடேசன் ஆகியோர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தின் பின்னர் பிரபல பத்திரிகையாளர் டி.சிவராம் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இந்தப் படுகொலை பேரினவாத சக்திகளால் ஊடகத்துக்கு விடுக்கப்பட்ட சவால் ஆகும்.

காலத்திற்குக் காலம் உண்மையான செய்திகளையும் யதார்த்தமான இராணுவ ஆய்வுகளையும் பத்திரிகைகளில் எழுதி வந்தவர் சிவராம்.

தமிழ்த் தேசியத்துக்காக உண்மையாகவும் நேர்மையாகவும் உழைத்த பத்திரிகையாளர் டி.சிவராம் படுகொலை செய்யப்பட்டமையைக் கண்டிப்பதுடன் இன்றைய தினத்தைக் கறுப்புக்கொடிகள் கட்டியும் தோரணங்கள் கட்டியும் துக்கதினமாக அனுஷ்டிக்குமாறு கோருகின்றோம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# அரசின் அடக்குமுறைக்கு அடிபணியாது துணிந்து செயற்பட்டவர் சிவராம்!

## மலையக மக்கள் முன்னணி தலைவர் பெ.சந்திரசேகரன்

(கொழும்பு)

ஊடகவியலாளர் சிவராம் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டிருப்பதானது உண்மைகளைத் தாக்குப் பிடிக்கமுடியாமல் - பொய்மை படுதோல்வி அடைந்துவருவதையே காட்டுகிறது என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பெ.சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஆயுதப் போராளிகளைப்போன்று அதிக வீச்சுள்ளவர் ஒரு பத்திரிகையாளன் என்பதற்குச் சான்றாக வாழ்ந்து காட்டியவர் சிவராம்.

நாடு முழுவதும் பரவலாக நடக்கும் கடத்தல்களையும், கொலைகளையும் அவதானிக்கின்றபோது அரச நிர்வாகத்தின் வங்குரோத்து நிலையை இந்தப் படுகொலை வெளிப்படுத்துகிறது.

அரசின் ஆதரவோடுதான் இந்தப் படுகொலைகள் நடைபெறுகின்றன என்ற விடயம் உண்மையாகிறது என்று தெரிவித்துள்ள பெ.சந்திரசேகரன் -

எந்தக் காலகட்டத்திலும் அரசின் அடக்குமுறைகளுக்கு அடங்கிப் போகாமல் செயற்பட்ட சிவராமின் துணிகரமான பங்களிப்பு வரலாற்றில் மறக்கமுடியாதவாறு நிரந்தரமாய் நிலைத்துநிற்கும் என்றும் தனது அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

# சங்கானை கோட்ட பாடசாலைகளில் மே 7 இல் தமிழ்மொழித்தினப் போட்டி

(சுழிபுரம்)

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சால் நடத்தப்படும் தமிழ்த் தினப் போட்டியை முன்னிட்டு சங்கானை கல்விக்கோட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்படும் போட்டிகள் அடுத்த மாதம் 07 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

இந்தக் கோட்டத்தில் உள்ள 32 பாடசாலைகளும் சுழிபுரம், வட்டுக்கோட்டை கொத்தணிகளாகப் பிரிக்கப்பட்டு -வட்டுக்கோட்டை கொத்தணி வட்டு.மத்திய கல்லூரியிலும், சுழிபுரம் கொத்தணி விக்ரோறியாக் கல்லூரியிலும் போட்டி நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன.

இந்தப் போட்டிகளில் வாசிப்பு முதலாம் இரண்டாம் பிரிவுக்கும், ஆக்கத்திறன் வெளிப்பாடு முதலாம் பிரிவினருக்கும், பேச்சு - பாவோதல் முதலாம், இரண்டாம், மூன்றாம் பிரிவுகளுக்கும், அசைவும் இசைவும் முதலாம் பிரிவுக்கும், இசை (தனி) இரண்டாம், மூன்றாம் பிரிவுக்கும் நடைபெறவுள்ளது.

தமிழ் அறிவு வினா விடைப் போட்டி, வில்லுப்பாட்டு ஆகியன 4 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வட்டு இந்துக் கல்லூரியிலும் நாட்டுக்கூத்து, சமூக நாடகப் போட்டிகள் 5 ஆம் திகதி மு.ப.9 மணிக்கு சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியிலும் நடைபெறவுள்ளதாக சங்கானைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் நா.சண்முகசுந்தரம் பாடசாலைகளுக்கு அறிவித்துள்ளார். (48)

# அனுமதியின்றி இறைச்சி விற்றவருக்கு ஆயிரம் ரூபா அபராதம் விதிப்பு!

(யாழ்ப்பாணம்)

அனுமதியின்றி சட்டவிரோதமான முறையில் மாட்டிறைச்சி விற்பனைசெய்த நபர் ஒருவருக்கு ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடுமாறு யாழ்.நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நாவாந்துறைப் பகுதியில் அனுமதி பெறாது மாட்டிறைச்சியை விற்பனைசெய்த நபர் ஒருவரை யாழ். மாநகரசபை பொது சுகாதார பரிசோதகர் கையும் மெய்யுமாகப் பிடித்தார்.

இவருக்கு எதிராக யாழ்.நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதையடுத்து வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரஸ்தாப நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து அனுமதிபெற்று மாட்டிறைச்சியை விற்பனைசெய்தமைக்காக ஆயிரம் ரூபா குற்றப் பணம் செலுத்துமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

## வடமராட்சி கிழக்கு சமாசத்துக்கு

# வாகனம் கொள்வனவு செய்ய 9.2 மில்லியன் நிதி ஒதுக்கீடு

சுனாமி அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துக்கு மீண்டும் கடலுணவுப் பொருட்களை கொழும்புச் சந்தைக்கு ஏற்றுமதி செய்வதற்கு வசதியாக வாகனங்கள் கொள்வனவு செயவதற்கென - யு.என்.டி.பி நிறுவனம் 9.2 மில்லியன் ரூபா சமாசத்திற்கு வழங்க முன்வந்துள்ளது.

கடந்த காலங்களில் கடலுணவு ஏற்றுமதியில் ஈடுபட்டிருந்த சமாசத்துக்குச் சொந்தமான ஒரு பாரவூர்தி, ஒரு குளிரூட்டி வாகனம், ஒரு உழவு இயந்திரம், இரண்டு உந்துருளிகள் என்பன ஆழியவளையில் அமைந்திருந்த கடலுணவு மையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தவேளை சுனாமி அனர்த்தத்தின்போது முற்றாக அழிக்கப்பட்டன.

மீண்டும் கடலுணவுப் பொருட்களை கொழும்புச் சந்தைக்கு ஏற்றுமதி செய்வதற்கு வாகனங்கள் இல்லாதது குறித்து சமாசம் - யூ.என்.டி.பி நிறுவனத்துடன் தொடர்புகொண்டதற்கிணங்க இரண்டு குளிரூட்டி வாகனங்களையும், ஒரு உழவு இயந்திரம் பெட்டியுடன், மோட்டார் சைக்கிள், கணினி ஆகியவற்றை வழங்க யூ.என்.டி.பி நிறுவனம் ஒப்பக்கொண்டுள்ளதாக சமாச வட்டாரங்கள் தெரிவித்தன. (21)

# பிரதேச செயலக அலுவலர்களுக்கு அடிப்படை ஆங்கில வகுப்புகள்!

(யாழ்ப்பாணம்)

முகாமைத்துவ அபிவிருத்தி திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள அடிப்படை ஆங்கில பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ள விரும்பும் உடுவில், தெல்லிப்பளை, கோப்பாய், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுகளுக்குட்பட்ட அரச அலுவலகங்களில் கடமைபுரியும் அலுவலர்களின் விண்ணப்பங்களை யாழ். மாவட்ட பிராந்திய ஆணையாளர் கோரியுள்ளார்.

அடுத்த மாதம் ஆரம்பமாகி தொடர்ந்து 6 மாதங்கள் வரை வாரத்தில் இரண்டு நாட்களில் மாலை 4 மணி தொடக்கம் 6 மணி வரை வகுப்புக்கள் நடைபெறும். கடந்த ஆண்டு நடந்த இவ்வாறான அடிப்படை ஆங்கில பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டவர்கள் இதில் கலந்து கொள்ள முடியாது.

பயிற்சி வகுப்பிற்கு கலந்துகொள்ள மேற்படி பிரதேச செயலகங்களில் கடமைபுரியும் அலுவலர் தாங்கள் கடமைபுரியும் திணைக்களத் தலைவரின் சிபாரிசுடன் உடன் விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு பிராந்திய ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

### விவசாய குழுக் கூட்டம்

யாழ்மாவட்ட விவசாயக் குழுக் கூட்டம் அடுத்தமாதம் 6 ஆம் திகதி மாலை 3 மணிக்கு யாழ்.செயலகத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி கூட்டத்தில் பெரும் போகச் செய்கை, மரநடுகைத் திட்டம், அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடு, நியாப்திட்டம், உணவு விவசாய நிறுவனத்தின் செயற்பாடு, கால்நடை வளர்ப்பு, மீன்பிடி, பனைதென்னை வள அபிவிருத்தி போன்ற செயற்திட்டங்கள் தொடர்பாக ஆராயப்படவுள்ளதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஷ் தெரிவித்துள்ளார்.

### மாதாந்த இசை நிகழ்ச்சி

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம் நடத்தும் மாதாந்த இசை நிகழ்ச்சி இன்று மாலை 5.30 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலாமண்டபத்தில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி உப அதிபர் ஆறு திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் க.சிவாஜி, திருமதி சிவாஜி ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வர். இந்த நிகழ்வின்போது இசை நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளது.

### வருடாந்த பொதுக் கூட்டம்

ஊர்காவற்துறைஉதவி அரசாங்க அதிபர் பிரிவின் வருடாந்த பொதுக்கூட்டம் இன்று காலை 10 மணிக்கு உதவி அரசாங்க அதிபர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் நடைபெறவுள்ளது.

என்வே, மேற்படி பொதுக் கூட்டத்துடன் தொடர்புடைய அனைவரையும் கூட்டத்தில் பங்கேற்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

### கருத்தரங்கு

கியூடெக் நிறுவனத்தின் யாழ் பிராந்திய குழுத்தலைவர்களுக்கான கருத்தரங்கு இன்று கியூடெக் மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு இடம் பெறவுள்ளது.

மனித உரிமைகள் ஆணைக் குழுவின் பிரதிநிதி ரி.சுவேந்திரராஜா, கியூடெக் நிறுவன இயக்குனர் ஜெயக்குமார், இணைப்பாளர் எஸ்.ஜோசப் பாலா ஆகியோர் கருத்துரை வழங்கவுள்ளனர். (91)


நாகம்ஸ் சுன்னாகம்

ரஜினிகாந், நயன்தாரா, பிரபு, ஜோதிகா, வடிவேல், நாசர் நடிப்பில்
3 வது ஜனத்திரள் வாரமாக
சந்திரமுகி
(C/3979)



காட்சி நேரம் :- (பு.நே.) 11.00, 3.00,7.00, 10.00

மனோகரா யாழ்ப்பாணம்

3 வது வெற்றி வாரமாக
இளைய தளபதி விஜய், போய்ஸ் புகழ் ஹாிணி நடித்த
சச்சின்



காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30

ராஜா யாழ்ப்பாணம்

பரத்,
கோபிகா
மற்றும் பலர் நடித்த
4 ஸ்டூடன்ஸ்
(சி-3980)

பு.நே: 10.30, 2.30, 6.30, 9.30


# 45 ஆவது ஆண்டு நிறைவும் சைவப்புலவர் பட்டமளிப்பும்!

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் 45 ஆவது ஆண்டு நிறைவும், சைவப்புலவர் பட்டமளிப்பு விழாவும் இன்று காலை 9.30 மணிக்கு வண்ணை நாவலர் மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை தலைமையில் இடம் பெறவுள்ள இந்த நிகழ்வில் - யாழ். பல்கலைக்கழக முன்னாள் கலைப் பீடாதிபதி பேராசிரியர் கோபாலகிருஷ்ண ஐயர் முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்வார்.

இந்த நிகழ்வில் நல்லை ஆதின முதல்வர் சோமசுந்தர ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்குவார்.

கடந்த வருடம் சைவப்புலவர் சங்கத்தால் நடத்தப்பட்ட இளம் சைவப் புலவர் தேர்வுகளில் சித்தியடைந்தவர்களுக்கு பேராசிரியர் கோபாலகிருஷ்ண ஐயர் பட்டங்களை வழங்கிக் கௌரவிப்பார்.

சைவப்புலவர் சி.வேலாயுதம் சைவ சித்தாந்த வாழ்வியல் என்ற தலைப்பில் சிறப்புரை நிகழ்த்துவார்.

இந்த நிகழ்வில் புராண படனப் போட்டியில் முதற் பரிசைப்பெற்ற மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலய மாணவர்களான இராசையா தனுஷன், விநாயகமூர்த்தி ரதிகரன், வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய மகா வித்தியாலய மாணவி லக்ஷமி எதிர்குலசிங்கம், கிருஷாந்தி கந்தவனம் கௌரவிக்கப்பட்டு பரிசில் வழங்கப்படவுள்ளது

அத்துடன் கடந்த வருடம் நடைபெற்ற சைவப்புலவர் பரீட்சையில் சித்தியடைந்த சுவாமிநாதபிள்ளை தேவமனோகரன் (இணுவில்), சசிகலா கனகரத்தினம்பிள்ளை (அச்சுவேலி), குஞ்சிதபாதம் சுரேஷ்குமார் (நல்லூர்), குமாரசுவாமி சண்முகலிங்கம் (சாவக்சேரி), துரைரட்ணசிங்கம் சடாச்சரசிங்கம் (கிளிநொச்சி) ஆகியோர் சைவப்புலவர் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்த நிகழ்வில் இளம் சைவப் புலவர் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு இளம் சைவப்புலவர் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளது.

## பருத்தித்துறை ப.நோ.கூ.சங்க ஊழியர்கள்

# அதிகரித்த சம்பளத்தை வழங்கக்கோரி நேற்று அடையாள வேலைநிறுத்தம்!

(பருத்தித்துறை)

அதிகரித்த சம்பள உயர்வை வழங்குமாறு கோரி பருத்தித்துறை பலநோக்கு கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் நேற்று அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இதனால் சங்கத்தின் அனைத்துக் கிளைகளும் மூடப்பட்டிருந்தன.

அரசாங்க ஊழியர்களுக்கு அதிகரித்த சம்பளக் கொடுப்பனவு வழங்கப்பட்டதுபோன்று, கூட்டுறவுத்துறை ஊழியர்களுக்கும் 2 ஆயிரத்து 500 ரூபாவை அதிகரித்த சம்பள உயர்வாக வழங்குமாறு அறிவிக்கப்பட்டிருந்தபோதிலும் இதுவரை அதிகரித்த சம்பளக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்றுக்காலை பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் கடமைக்குச் செல்லாது தலைமை அலுவலகத்தின் முன்பாக எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அத்துடன், தமது சித்திரை மாத சம்பளத்துடன் அதிகரித்த சம்பளக் கொடுப்பனவை வழங்குமாறுகோரி மகஜர் ஒன்றையும் பொது முகாமையாளரிடம் கையளித்தனர்.

# மிதிவெடிகள் அகற்றப்பட்ட பின்னர் மறவன்புலோவில் குடியமர அனுமதி

## படைத்தரப்பினர் உறுதி

(நாவற்குழி)

மறவன்புலோ உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள நித்தர்ப்புலம் செல்வமுத்துமாரி அம்மன் ஆலயம், நித்தர் புலம் பெரியதம்பிரான் ஆலயம் மற்றும் வள்ளக்குளம் வீரகத்திப் பிள்ளையார் ஆலயம் ஆகிய மூன்று ஆலயங்களின் பூசை வழிபாட்டுக்குப் படைத்தரப்பினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.சுரேஷ் பிரேமச்சந்திரனின் ஏற்பாட்டில் பலாலி படைத்தலைமை அலுவலகத்தின் மேஜர் ஜெனரல் எஸ்.டி.தென்னக்கோனை அந்தப் பகுதியைச் சேர்ந்த பிரதிநிதியான செ.ஆனந்தரஞ்சன் சந்தித்து இடம் பெயர்ந்து வாழும் மக்கள் படும் அவலங்களை எடுத்துக்கூறியதுடன், பல ஆலயங்கள் பூசை இல்லாமல் இருப்பதை சுட்டிக்காட்டியதற்கு அமைய சில நடவடிக்கை எடுப்பதாக படைத் தளபதி உறுதிவழங்கினார். தொடர்ந்து பலாலி படைத்தளபதி, அல்லாரை கட்டளைத்தளபதி, தனங்கிளப்பு கோவிலாக்கண்டி கட்டளைத் தளபதிகள், செ.ஆனந்தரஞ்சனை உயர் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ள ஆலயங்களைப் பார்வையிட அழைத்துச் சென்றதுடன்

மறவன்புலோ மத்தி மக்களின் தொழில்சார் இடங்களையும் பார்வையிட்டு உடனடியாக மேற்படி மூன்று ஆலயங்களிலும் துப்புரவுப் பணிகளை மேற்கொண்டு பூசைகளை ஆரம்பிக்க அனுமதிப்பதாகவும் உறுதியளித்தார்.

அத்துடன் மேற்குறிப்பிட்ட இடங்களில் உள்ள ஏனைய ஆலயங்களின் பூசை வழிபாட்டுக்கும் விரைவில் நடவடிக்கை எடுப்பதாகவும், மிதிவெடி அகற்றப்பட்டு மறவன்புலோ மத்தியில் மக்கள் மீள்குடியமர்வுக்கு ஒழுங்கு செய்வதாகவும் உறுதி கூறப்பட்டது.

மேலும் ஆலயம் துப்புரவு செய்தல் மற்றும் பூசைகள் தொடங்குவது உட்பட வேறு சில விடயங்களை ஆராயும் நோக்கில் அடுத்தமாதம் முதல் வாரத்தில் கோவிலாக்கண்டியில் நாடாளுமன்ற உறுப்பினர் க.சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையில் சிறு கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

### கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

சில்லாலை கிறிஸ்துராஜா விளையாட்டுக் கழகம் மே தினத்தை முன்னிட்டு நடத்தும் மின்னொளியிலான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி நாளை மாலை 3 மணிக்கு விளையாட்டுக் கழக மைதானததல் நடைபெறவுள்ளது.

வலிகாமம் பிரதேச செயலர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட கழகங்கள் இந்தப் போட்டியில் பங்குபற்றவுள்ளதாக விளையாட்டுக்கழகத் தலைவர் தெரிவித்தார். (91)

### வீதி திருத்தப்படுகிறது

(சங்கானை)

நீண்டகாலமாகத் திருத்தப்படாமையால் குன்றும் குழியுமாகக் காணப்பட்ட வலிகாமம் மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட பாணாவெட்டி வீதி, பழைய தபால் கந்தோர் வீதி, அத்திரான் 2ஆம் வீதி, சீக்காய் வயல் வீதி, மூளாய் 2ஆம் வீதி, கலட்டி வீதி மற்றும் சங்கானை ஓடக்கரை வீதி ஆகியன நிகொட் நிறுவனத்தின் நிதியுதவித் திட்டத்தின்கீழ் தற்போது திருத்தப்பட்டுவருகிறன. (48)

### ஆசிரியருக்கான கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்விக்கோட்ட ஆசிரியர்களுக்கான சமூகக் கல்வி வரலாறு கற்பித்தல் சாதனைப் போட்டியும் கண்காட்சியும் இன்று யாழ் மரியாள் வித்தியாலயத்தில் காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. (91)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட எவரும் பட்டினியால் வாடவில்லையாம்!

## ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு



(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட இலங்கையர்கள் எவரும் இதுவரை பட்டினியால் வாடவில்லை. தொற்றுநோய்க்கு இலக்காகி ஒருவரும் உயிரிழக்கவில்லை. பாதிக்கப்பட்ட மக்களுக்கு எங்களால் இயன்றவரையில் நிவாரணங்களை வழங்கி வருகிறோம் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு மீன்பிடிப் படகுகளை வழங்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை வெலிசறையிலுள்ள கடற்படை முகாமில் நடைபெற்றது.

அரசாங்கத்தின் அனுசரணையுடன் கடற்படையினர் இந்தப் படகுகளை வழங்கினர்.

பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு 65 படகுகளைக் கையளித்து, அங்கு உரையாற்றியபோதே ஜனாதிபதி சந்திரிகா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் -

இடம்பெயர்ந்த மக்களுக்கு உண்பதற்கு உணவில்லை. குடிப்பதற்கு நீரில்லை. மக்கள் பட்டினியால் இறக்கப் போகின்றனர் என சில அரசியல்வாதிகள் ஊடகங்கள் ஊடாகப் பொய்ப் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர். ஆனால், அப்படி எதுவும் இல்லை.

சுனாமியால் பாதிக்கப்பட்ட - 100 மீற்றர் தூரத்துக்கு அப்பால் வாழும் மக்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம். ஏனையவர்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்கவும், சொத்துச் சேதங்களுக்கு நஷ்டஈடு வழங்கவும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளோம்.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 5 ஆயிரம் ரூபா வீதம் வழங்குகிறோம். பால்மா முதலான நிவாரணப் பொருட்களை வழங்குகிறோம்.

எமக்குக் கிடைத்த வெளிநாட்டு உதவிகளைக் கொண்டு வீடுகளை விரைவில் அமைத்துக்கொடுக்க உறுதி பூண்டுள்ளோம் எனத் தெரிவித்தார்.

# ஜெயரட்ணம் காணாமற்போனமை; எம்மால் எதுவும் செய்யமுடியாது!

## போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு கைவிரிப்பு!

(கொழும்பு)

புலனாய்வு அதிகாரி ஜெயரட்ணம் காணாமற்போனமை தொடர்பாக எவ்வித நடவடிக்கையையும் தம்மால் மேற்கொள்ள முடியாதென போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

இன்ஸ்பெக்டர் ஜெயரட்ணத்தை விடுதலைப் புலிகளே கடத்திச் சென்றிருப்பதாகக் கூறி கடந்த புதன்கிழமை தேசிய பிக்குகள் முன்னணி கொழும்பிலுள்ள போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்துக்கு முன்பாக நடத்திய ஆர்ப்பாட்டத்தின்போதே, கண்காணிப்புக்குழு இவ்வாறு தெரிவித்துள்ளது.

அரசாங்கத்துக்கும், புலிகளுக்கும் இடையில் தகவல்களைப் பரிமாறுவதே எமது பணியாகும். இதைத் தவிர எம்மால் வேறெந்த நடவடிக்கைகளையும் எடுக்கமுடியாதெனவும் கண்காணிப்புமு தெரிவித்துள்ளது. (01)

# சுனாமி நிவாரண மோசடி குறித்து லஞ்ச ஆணைக்குழு விசாரணை

(கொழும்பு)

லஞ்ச ஊழல்களை விசாரணை செய்யும் ஆணைக்குழு சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப்பொருள் விநியோகத்தில் இடம் பெறுவதாகக் கூறப்படும் மோசடிகள் பற்றி விசாரிக்கப்போவதாக தெரிவித்துள்ளது.

இத்தகைய மோசடிகள் பற்றி பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நிவாரண உதவிகளைப் பெற்றுக் கொடுக்க எடுத்த முயற்சிகளின்போது லஞ்சம் பெற்றதாக கூறப்படும் கிராம உத்தியோகத்தர் ஒருவரை ஆணைக் குழு அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர்.

இந்த உத்தியோகத்தர் வெலிகம பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# குருமுதல்வர் இல்லம் மீது மட்டக்களப்பில் தாக்குதல்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு – கிரான் மெதடிஸ்த குரு முதல்வரின் இல்லம் மீது கடந்த புதன்கிழமை இரவு இனந்தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்தினர்.

கடந்த புதன்கிழமை இரவு 10.30 மணிக்கு இல்லத்தின் சுற்றுப்புற முட் கம்பி வேலிகளை வெட்டி உள்நுழைந்த நபர்கள் – குருமனைக்கும் பொருட்கள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த கொட்டகைகளுக்கும் தீவைத்தனர்.

குருமனையின் ஒரு பகுதியும், கொட்டகைகள் இரண்டும் முற்றாகச் சேதமடைந்தன. இரு நபர்களால் கைக்குண்டும் வீசப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

இந்தச் சம்பவத்தின் போது குரு முதல்வர்களின் உதவியாளர் மட்டுமே அங்கு இருந்ததாகத் தெரியவருகிறது.

# கோவையிலிருந்து இலங்கைக்கு மே 4 முதல் சரக்கு விமான சேவை

கோவையிலிருந்து - இலங்கைக்கு வாரம் இருமுறை சரக்கு விமானப் போக்குவரத்தை மே 4 ஆம் திகதி முதல் ஸ்ரீலங்கா கார்கோ ஏயர்லைன்ஸ் நிறுவனம் ஆரம்பிக்கவுள்ளது.

இது குறித்து ஏயர்லைன்ஸ் நிறுவனத் தலைவர் நலின் ரோட்ரிலோ கருத்துத் தெரிவிக்கையில் -

கோவையிலிருந்து இந்த விமானப் போக்குவரத்துச் சேவையைத் தொடங்குவதன் மூலம், கொழும்பு-கோவை இடையேயான வர்த்தகம் மேம்பாடடையும்.

இதன்படி கோவையிலுள்ள என்ஜினியரிங் டெக்ஸ்டைல் மற்றும் விவசாயம் சார்ந்த பொருட்கள், பழங்கள், பூக்கள், காய்கறிகள் ஆகியவற்றின் ஏற்றுமதியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்படும்.

கோவையிலிருந்து வாரத்தில் - புதன் மற்றும் சனி ஆகிய நாட்களில் ஏ.என் - 12 எப் என்ற சரக்கு விமானம் கொழும்பை வந்தடையும்.

இந்த விமானம் மூலம், வாரத்துக்கு 40 தொன் சரக்குகளை எடுத்துச் செல்ல முடியும். கோவையிலிருந்து கொண்டுவரப்படும் சரக்குகளை, கொழும்பிலிருந்து சர்வதேச நாடுகளுக்கு அனுப்பமுடியும்.

குறிப்பாக - மத்திய கிழக்கு நாடுகள், கிழக்காசிய நாடுகள், ஐரோப்பிய நாடுகள், மாலைதீவு ஆகிய பகுதிகளுக்கு ஒரே நாளில் சரக்கு சென்றடைய இதன்மூலம் வசதி ஏற்பட்டுள்ளது.

# ஜனாதிபதி – பிரதமர் இடையே அமைச்சரவையில் வாக்குவாதம்!

(கொழும்பு)

அமைச்சரவையில் – ஜனாதிபதிக்கும், பிரதமருக்குமிடையில் சூடான வாக்குவாதம் இடம்பெற்ற தாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் விதந்துரையின் பின்பு, கல்வி அமைச்சின் செயலாளரால் கொழும்பு ஆனந்தா, சேனநாயக்கா, குருநாகல் மலியதேவ பெண்கள் மற்றும் கண்டி கிங்ஸ்வூட் கல்லூரிகளின் அதிபர்களின் பணிநீக்கம் தொடர்பாகக் கடந்த அமைச்சரவைக் கூட்டத்தின்போது பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கும், ஜனாதிபதிக்கும் இடையில் சூடான விவாதம் இடம்பெற்றதாகத் தெரியவருகிறது.

கல்லூரி அதிபர்களின் பணிநீக்கம் தொடர்பாகத் தனக்குச் சிக்கல்கள் இருப்பதாகவும், பிழை செய்யும் அதிபர்களுக்குத் தண்டனை வழங்கும் போது, பின்பற்றக் கூடிய கொள்கைகள் உள்ளன. தற்போதைய செயல்கள் அனைத்தும், தேசிய பாடசாலை அதிபர்களுக்கு, அரசு மீது விரக்தி ஏற்பட்டுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

பிரதமரின் இந்தக் கருத்துத் தொடர்பாக ஆத்திரமடைந்த ஜனாதிபதி –பிரதமரோடு சூடான வாக்குவாதத்தில் இணங்கியதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# சுனாமியில் காணாமற்போனோருக்கு மரண அத்தாட்சிப் பத்திரம் வழங்க உயர்நீதிமன்றம் புதிய ஆலோசனை!

(கொழும்பு)

சுனாமியின் பின்னர், காணாமற்போனவர்களுக்கான மரண அத்தாட்சிப் பத்திரம் வழங்கும் விடயம் தொடர்பில் உயர் நீதிமன்றம் புதிய ஆலோசனைகளை அரசாங்கத்துக்கு வழங்கியுள்ளது.

சுனாமியில் காணமற்போனவர்கள் இறந்துவிட்டார்கள் எனக் கருதி, மரண அத்தாட்சிப் பத்திரங்களை உடனடியாக வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்தது.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை - வாழும் உரிமையைப் பறிக்கும் செயல் எனத் தெரிவித்து, மனித உரிமை அமைப்பு ஒன்று வழக்குத் தாக்கல் செய்தது. இந்த வழக்கை விசாரணை செய்த உயர் நீதிமன்றம் - அரசாங்கத்துக்குச் சில பரிந்துரைகளை வழங்கியுள்ளது.

அதன் அடிப்படையில் சுனாமி ஏற்பட்டு ஆறு மாதங்களின் பின்னரே காணாமற்போனவர்களின் உறவினர்கள் மரண அத்தாட்சிப் பத்திரத்தைப் பெறுவதற்கு விண்ணப்பிக்க முடியும் எனக் குறிப்பிட்டுள்ளது.

காணாமற்போன குழந்தைகளுக்கான மரண அத்தாட்சிப் பத்திரங்களைப் பெறுவதற்கு - ஒரு வருடகால அவகாசம் வழங்குமாறும் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

# தமிழகத்திலிருந்து திரும்புவோருக்கு உதவ அவுஸ்ரேலிய அரசாங்கம் முன்வந்துள்ளது

இந்தியாவிலிருந்து திரும்பும் இலங்கை அகதிகளுக்கு உதவுவதற்கென 3 மில்லியன் அவுஸ்ரேலிய டொலர் நிதியுதவியை வழங்குவதற்கு - அவுஸ்ரேலிய அரசாங்கம் முன்வந்துள்ளது.

இந்த நிதியுதவியைப் புலம்பெயர்ந்தவர்களுக்கான சர்வதேச அமைப்பினூடாக அவுஸ்ரேலிய அரசாங்கம் வழங்கத் தீர்மானித்திருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த விடயம்தொடர்பாக அவுஸ்ரேலியத் தூதுவர் கிரேக் பிரெஜ்ற்கும், புலம்பெயர்ந்தவர்களுக்கான சர்வதேச அமைப்பின் இலங்கைக் கிளையின் தலைவர் ஷிகானுக்குமிடையில் பேச்சுவார்த்தையொன்று இடம்பெற்றுள்ளது.

கடந்த போர்க்காலத்தில் இந்தியாவுக்குச் சென்று, தற்போது மீண்டும் இலங்கைக்குத் திரும்பும் அகதிகளுக்கு உதவவேண்டிய கடமையிருப்பதாகவும், இதற்கென தாம் 3 மில்லியன் அவுஸ்ரேலிய டொலர் நிதியுதவி வழங்கத் தீர்மானித்திருப்பதாகவும் அவுஸ்ரேலியத் தூதுவர் கிரேக் பிரெஜ் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவிலிருந்து, இலங்கைக்குத் திரும்பிவரும் அகதிகள் - மீண்டும் சமூகத்துடன் இணைந்து வாழ்வதற்கான உதவிகள், கல்வி, சுகாதார வசதிகள் போன்ற அடிப்படை வசதிகளை வழங்குவதற்கு இந்த நிதியுதவி பயன்படுத்தப்படுமென அவர் கூறினார்.

# பொதுக்கட்டமைப்பு எதிர்ப்பு தூதரகங்களுக்கு விளக்க தயாராகிறது ஜே.வி.பி.

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளை வழங்கும் வகையில் - அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையே ஏற்படுத்தப்படவுள்ள பொதுக்கட்டமைப்புக்கு எதிரான தமது நடவடிக்கைகளை நியாயப்படுத்தும் வகையில், ஜே.வி.பி.சர்வதேச இராஜதந்திரிகளைச் சந்திக்கவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி, கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்களை ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க, செயலாளர் ரின்வின் சில்வா, பிரசார செயலர் விமல்வீரவன்ச ஆகியோர் இந்தச் சந்திப்புக்களில் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஜே.வி.பினர் இந்த நடவடிக்கையில் முதற்கட்டமாக இந்தியத் தூதுவர் நிருபமாராவ் மற்றும் இந்திய இராஜதந்திரிகளுடன் இந்தச் சந்திப்பு விரைவில் இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# களஞ்சியம் தீக்கிரை

மட்டக்களப்பு கிரானில் நேற்று முன்தினம் களஞ்சியமொன்று தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளது.

கிரானில் அமைந்துள்ள மெதடிஸ்த தேவாலயத்துக்குச் சொந்தமான களஞ்சியத்திலேயே இந்தத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இதன்போது சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான பெருமளவான பொருட்கள் தீக்கிரையாகின.

இதேவேளை - இந்தத் தீ விபத்துச் சம்பவம் தமது களஞ்சியம் ஒன்றில் ஏற்பட்டதாக வெளியான தகவலைப் பெந்தகோஸ்து சபை நிராகரித்துள்ளது.

# குற்றம் சாட்டப்பட்ட அதிபர்களுக்கெதிராக விசாரணைகள் ஆரம்பிக்கப்படவில்லை!

(கொழும்பு)

லஞ்சமோசடி குற்றஞ்சுமத்தப்பட்ட பாடசாலை அதிபர்களுக்கெதிராக ஒழுக்காற்று விசாரணைகள் ஆரம்பிக்கப்படவில்லையென கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.


பதவிநீக்கம் செய்யப்பட்ட 5 தேசிய பாடசாலை அதிபர்கள் தொடர்பான அறிக்கைகளை - ஜனாதிபதி விசாரணைப் பிரிவு இதுவரையில் சமர்ப்பிக்கவில்லையென கல்வியமைச்சின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி விசாரணைப் பிரிவானது, தனது அறிக்கைகளைப் பொதுச் சேவைகள் ஆணைக்குழுவுக்கு அனுப்பிவைத்து, அதன் பின்னரே கல்வியமைச்சிடம் கையளிக்கப்படுமென கல்வியமைச்சு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இந்த அறிக்கைகள் கிடைக்கப்பெற்ற பின்னரே குற்றஞ்சாட்டப்பட்ட அதிபர்கள் மீது ஒழுக்காற்று விசாரணைகளை மேற்கொள்ள முடியுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

சேவைநீக்கம் செய்யப்பட்ட அதிபர்கள் தொடர்பான அனைத்து விபரங்களையும் ஒப்படைக்குமாறு, பொதுச் சேவைகள் ஆணைக்குழு, கல்வியமைச்சிடம் கோரியிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# மேற்கிந்திய சுற்றுத்தொடரில் சமி, மலிக் ஆடுவது சந்தேகம்!



(கராச்சி)

பாகிஸ்தான் அணியின் மேற்கிந்தியத் தீவுகளுக்கான சுற்றுத் தொடரில் பாகிஸ்தான் வீரர்களான மொஹமட் சமியும், சொகைப் மலிக்கும் பங்கேற்பது சந்தேகத்திற்குரிய விடயமாகியுள்ளது.

இந்திய அணிக்கெதிரான சுற்றுத் தொடரில் சிறப்பாகப் பந்துவீசிய மொஹமட் சமிக்கு கடந்த திங்களன்று குதிக்காலில் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இதனைத் தொடர்ந்து அவர் மூன்றுவார காலத்துக்கு முழுமையான ஓய்விலிருக்கவேண்டுமென வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தான் அணியின் அதிவேகப் பந்துவீச்சாளர் சொகைப் அக்தர் உபாதைக்குள்ளானதால், அவருடைய இடத்துக்கு சமி அழைக்கப்பட்டார். இவர் இந்தியத் தொடரில் சிறப்பாகச் செயற்பட்டபோதும் குதிக்கால் உபாதை காரணமாக இறுதி ஒருநாள் போட்டிகளில் விளையாடும் வாய்ப்பை இழந்தார்.

பாகிஸ்தான் அணியின் சகலதுறை வீரரான சொகைப் மலிக் உடனடியாக மூட்டு சத்திரசிகிச்சை மேற்கொள்ளாவிடின் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் பந்துவீசமுடியாதநிலை ஏற்பட்டுவிடுமென எச்சரிக்கப்பட்டுள்ளது.

2004ஆம் ஆண்டு இலங்கை அணிக்கெதிரான போட்டியின்போது நடுவர்களின் சர்ச்சைக்குள்ளான மலிக் இடையிடையே மட்டுமே பந்து வீசிவந்தார்.

கடந்த திங்கட்கிழமை தென்னாபிரிக்காவிலிருந்து பரிசோதனைகளை முடித்துக்கொண்டு நாடு திரும்பிய அவருக்கு கையில் வலி ஏற்பட்டுள்ளது. அவர் கையை நேராக வைத்து பந்துவீச முயன்றமையாலேயே இந்த நிலைமை தோன்றியுள்ளது. இந்த நிலைமையிலிருந்து விடுபடுவதற்கு அவர் போட்டிகளுக்கு முன்பதாக வலி நிவாரண வில்லைகளைப் பயன்படுத்தவேண்டும். அன்றேல் சத்திரசிகிச்சை மேற்கொள்ளவேண்டும்.



சத்திரசிகிச்சை மேற்கொள்வதே அவருக்குச் சிறந்ததாக அமையுமென வைத்தியர்கள் அறிவுறுத்தியுள்ளனர். இவ்வாறு சத்திர சிகிச்சைக்கு உள்ளாகும் பட்சத்தில் அவர் 3 மாதங்கள் முழுமையாக ஓய்வெடுக்கவேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கிந்தியச் சுற்றுத் தொடரில் பங்கேற்கும் பாகிஸ்தான் அணி எதிர்வரும் திங்கட்கிழமை அறிவிக்கப்படவுள்ளது. பெரும்பாலும் மலிக் மேற்கிந்தியத் தீவுகளுக்கான சுற்றுத் தொடரை நிறைவு செய்த பின்பே சத்திரசிகிச்சை மேற்கொள்வாரென எதிர்பார்க்கப்படுகிறது.

# மும்முனை கிரிக்கெட் தொடர் போட்டி திகதிகள் அறிவிப்பு!

(கொழும்பு)

இந்தியா, இலங்கை, மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் மோதும் கிரிக்கெட் போட்டி ஓகஸ்ட் மாதம் இலங்கையில் நடைபெறவுள்ளது.

இதில் இந்தியா, இலங்கை, மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் மோதுகின்றன. ஒவ்வொரு அணியும் மற்ற அணியுடன் 2 முறை மோதும். புள்ளிகள் அடிப்படையில் முதல் 2 இடங்களைப் பிடிக்கும் அணிகள் இறுதிப் போட்டியில் விளையாடத் தகுதிபெறும்.

ஓகஸ்ட் மாதம் 2ஆம் திகதி இந்தப் போட்டிகள் தொடங்கி 14ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இதில் அணிகள் மோதும் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. அணி ஒழுங்கு வருமாறு -

ஓகஸ்ட் 02 - இந்தியா - இலங்கை (தம்புள்ள)
ஓகஸ்ட் 04 - இந்தியா - மேற்கிந்தியத் தீவுகள் (தம்புள்ள)
ஓகஸ்ட் 06 - இலங்கை - மேற்கிந்தியத் தீவுகள் (தம்புள்ள)
ஓகஸ்ட் 08 - இந்தியா - மேற்கிந்தியத் தீவுகள் (தம்புள்ள)
ஓகஸ்ட் 10 - இந்தியா - இலங்கை (கொழும்பு)
ஓகஸ்ட் 12 - இலங்கை - மேற்கிந்தியத் தீவுகள் (கொழும்பு)
ஓகஸ்ட் 14 - இறுதிப் போட்டி (கொழும்பு)

# தென்மராட்சி வலயமட்டத்திலான விளையாட்டுப் போட்டி முடிவுகள்!

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளின் விளையாட்டு போட்டி முடிவுகள் வருமாறு -

கரப்பந்து -15 வயது பெண்கள் -

1ஆம் இடம் - கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம், 2ஆம் இடம் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி, 3ஆம் இடம்-கைதடி நாவற்குழி மகாவித்தியாலயம்.

மேசைப்பந்து 15 வயதுப் பெண்கள் -

1ஆம் இடம் சாவகச்சேரி மகளிர் கல்லூரி, 2ஆம் இடம்-வீரசிங்கம் மகாவித்தியாலயம்.

மேசைப்பந்து 19 வயது ஆண்கள்-

1ஆம் இடம் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி, 2ஆம் இடம் - வீரசிங்கம் மகாவித்தியாலயம், 3ஆம் இடம் - வரணி மகாவித்தியாலயம்.

பூப்பந்து 19 வயது ஆண்கள் -

1ஆம் இடம் வரணி மகாவித்தியாலயம், 2ஆம் இடம் -வீரசிங்கம் மகாவித்தியாலயம், 3ஆம் இடம்-கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயம்.

பூப்பந்து 19 வயது பெண்கள் -

1ஆம் இடம் -சாவகச்சேரி மகளிர் கல்லூரி, 2ஆம்இடம் - வரணி மகாவித்தியாலயம், 3ஆம் இடம் - வீரசிங்கம் மகாவித்தியாலயம்.

## விளையாட்டு

# ஜே.எஸ். ரெனிஸ் தொடர் காலிறுதியில் கிளைஸ்டர்ஸ்!

(வார்சோ)

ஜே.எஸ். கிண்ண ரெனிஸ் தொடரில் கிம் கிளைஸ்டர்ஸ் காலிறுதிச் சுற்றுக்கு முன் னேறினார்.



போலந்தின் வார்சோ நகரில் இந்தத் தொடர் நடைபெற்றுவருகிறது. புதன் கிழமை நடந்த போட்டியில் பெல்ஜியத்தின் கிளைஸ்டர்ஸ், ரஷ்யாவின் மரியா கிரிலென்கோவைச் சந்தித்தார். இந்தப் போட்டியில் கிளைஸ்டர்ஸ் 6-2, 6-1 என்ற எளிய செட்களில் வெற்றிபெற்று காலிறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு போட்டியில் இரண்டாம் நிலை வீராங்கனையான ரஷ்யாவின் சுவட்லானா குஸ்நெட்சோவா, இஸ்ரேலின் அன்னஸ் மாஷ்னோவாவைச் சந்தித்தார். இரு வீராங்கனைகளிடையே கடும் போட்டி நிலவியது. இறுதியில் குஸ்நெட்சோவா 6-2, 4-6, 6-0 என்ற செட்களில் போராடி வெற்றிபெற்றார்.

காலிறுதியில் கிளைஸ்டர்ஸ், ரஷ்யாவின் எலீனா போவினாவையும், குஸ்நெட்சோவா, இத்தாலியின் சில்வியா பரினாவையும் சந்திக்கின்றனர்.

# மீண்டும் தொடக்க ஆட்டக்காரராக கங்கூலி களமிறங்கவேண்டுமாம்!

## அஜித் வடேகர் சொல்கிறார்

(புதுடெல்கி)

கங்கூலி மீண்டும் தொடக்க ஆட்டக்காரராகக் களமிறங்கினால் மீண்டும் பழைய நிலைக்குத் திரும்புவார். அவர் தொடக்க வீரராகக் களமிறங்குவதே நல்லது என்று இந்திய அணியின் முன்னாள் கப்டன் அஜித் வடேகர் தெரிவித்தார்.

தற்போது கங்கூலி 6 போட்டிகளில் விளையாடக்கூடாது என்கிற தடைக்கு உள்ளாகியிருக்கிறார். இந்த இடைவெளி அவருக்கு நன்மையை ஏற்படுத்தும் என்று நான் நினைக்கிறேன். அவர் நன்கு பயிற்சி செய்யவேண்டும். ஆட்டத்தில் முழுக் கவனம் செலுத்தவேண்டும்.

அவர் விளையாடும்போது அல்லது பயிற்சிபெறும்போது வீடியோ படம் எடுத்து வைத்துக்கொண்டு, அதைத் திரும்ப டி.வி.யில் போட்டுப் பார்க்கவேண்டும். அப்போது அவர் துடுப்பெடுத்தாடும்போது செய்யும் தவறுகளைத் தெரிந்துகொள்ளமுடியும். இது போன்ற யோசனைகளை அவர் ஏற்றுக்கொண்டு முயற்சிசெய்தால் கண்டிப்பாக விரைவில் அவர் நல்ல திறனுடன் விளையாடமுடியும்.

அகமதாபாத் ஒருநாள் போட்டியின்போது இந்திய அணி மெதுவாகப் பந்துவீசிய குற்றத்துக்காக அந்தப் பொறுப்பு கங்கூலி மீது சுமத்தப்பட்டு, அவர் தண்டனைக்கு ஆளாகியிருக்கிறார். உண்மையில் அந்தக் குற்றத்துக்கு அவருடைய சக வீரர்களும், பயிற்சியாளருமே காரணமானவர்கள். பந்து வீச்சாளர்களும் அதற்குப் பொறுப்பானவர்கள்.



இதுபோல மெதுவாகப் பந்து வீசப்படுகிறபோது, பயிற்சியாளர் யாராவது ஒரு பதில் வீரரைத் தண்ணீர் கொடுத்து அனுப்புவதுபோல் அனுப்பி, விடயத்தைக் கப்டனுக்குச் சொல்லி உஷார்ப்படுத்த வேண்டும்.

கங்கூலி முன்பெல்லாம் தொடக்க ஆட்டக்காரராகக் களமிறங்குவார். அப்போதெல்லாம் சிறப்பாக விளையாடி ஓட்டங்ளைக் குவித்திருக்கிறார். ஆனால் கப்டன் பொறுப்பை ஏற்றபின்பு ஆட்டக்காரர் என்ற இடத்தை விட்டுக் கொடுத்து தியாகம் செய்துவிட்டார். நடுவரிசைத் துடுப்பாட்ட வீரராக இருந்த நிலையிலும் ஓரளவு ஓட்டங்களைக் குவிக்கத்தான் செய்தார். ஆனாலும் அவர் மீண்டும் தொடக்க ஆட்டக்காரராக இறங்குவதே நல்லது. அப்படி விளையாடினால் மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பமுடியும். இவ்வாறு அவர் கூறினார்.

# ஷேன் வோன் மீது மீண்டும் குற்றச்சாட்டு!



(லண்டன்)

நான் மிகவும் சாதுவான ஆள். என்னை வில்லனாகச் சித்தரிக்க இங்கிலாந்துக்காரர்கள் திட்டமிட்டு முயற்சி செய்கிறார்கள் என்று வருத்தப்படுகிறார் ஷேன் வோன்.

ஆடுகளத்தில் எதிரணி வீரர்களைத் திட்டுவது, முறைப்பது போன்ற விடயங்களில் அவுஸ்ரேலிய கிரிக்கெட் வீரர்களுக்கு தனி மதிப்புண்டு.

குறிப்பாக, அந்த அணியின் ஷேன் வோன், பலமுறை கண்டிக்கப்பட்டிருக்கிறார். மீண்டும் ஒருமுறை சர்ச்சையில் சிக்கியிருக்கிறார். இங்கிலாந்தில் ஹாம்ப்ஷயர் கவுண்டி அணிக்காக விளையாடுகிறார் ஷேன் வோன்.

ஹாம்ப்ஷயர், சஸ்செக்ஸ் கவுண்டி அணிகளுக்கிடையே சமீபத்தில் போட்டி நடைபெற்றது. இதில் சஸ்செக்ஸ் வீரர் மாட் பிரையர் என்பவரிடம் வாக்குவாதம் செய்து திட்டினாராம் வோன். சஸ்செக்ஸ் கப்டன் கிறிஸ் அடம்ஸ் இதுபற்றி புகார் தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தின் நிஜப் பின்னணி குறித்து வோன் அளித்துள்ள பேட்டியில் -

இங்கிலாந்துக் காரர்கள் என்னை வில்லனாகச் சித்தரிக்கவேண்டுமென்பதில் ஆவர்மாக இருக்கிறார்கள். பிரையரை நான் திட்டியது உண்மைதான். ஆனால், நடந்த சம்பவத்தின் ஒரு பகுதி மட்டும் வெளியில் சொல்லப்பட்டிருக்கிறது.

சக வீரர் சைமன் கடிச்சை வேண்டுமென்றே இடித்தார் மாட் பிரையர். அதைக் கண்டிக்கக்கூடாதா? இதைத்தான் இங்கிலாந்து வீரர்கள் பெரிதுபடுத்தி, எனக்கு மன உளைச்சல் தரப் பார்க்கின்றனர். நான் மிகவும் சாதுவான ஆள் என மேலும் தெரிவித்தார்.

வோன் மீதான இந்தப் புகாரை அவரது அவுஸ்ரேலிய கிரிக்கெட் கப்டன் ரிக்கி பொண்டிங், அவுஸ்ரேலிய தெரிவுக்குழுத் தலைவர் ஜேம்ஸ் சுதர்லேண்ட் இருவரும் பெரிதுபடுத்தவில்லை.

# 7ஆவது இடத்தில் என்னை களம் இறக்குகிறார்களே!

## கவலை தெரிவிக்கிறார் கைவ்



என்னை 7ஆவது இடத்தில் களமிறக்குகிறார்களே என்று இந்திய கிரிக்கெட் வீரர் மொகமட் கைவ் கவலை தெரிவித்துள்ளார்.

புதுடெல்கியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் இந்திய கிரிக்கெட் அணியின் சகலதுறை ஆட்டக்காரர் மொகமட் கைவ் கலந்துகொண்டார். அப்போது அவர் செய்தியாளர்களுக்கு கூறியதாவது -

என்னை 7ஆவது இடத்தில் துடுப்பாட்டம் செய்வதற்காக களமிறக்குகிறார்கள். இந்திய அணி சிரமமான நிலையில் இருக்கும்போது எனக்குப் பொறுப்பு அதிகமாகிவிடுகிறது. இதனால் சரியாகத் துடுப்பெடுத்தாட முடிவதில்லை. வேகமாகவும் ஓட்டங்களை எடுக்கவேண்டும், விக்கெட் விழாமலும் பார்த்துக் கொள்ளவேண்டும்.

இப்படி ஒரு இக்கட்டான நிலையில் நான் களமிறங்குகிற பட்சத்தில் பெரிய அளவுக்கு ஷொட் அடிக்க முடிவதில்லை.

நான் இதை ஒரு புகாராகச் சொல்லவில்லை. பொதுவாக என்னுடைய பணியை நான் சிறப்பாகச் செய்து கொண்டிருக்கிறேன். என்னுயை விளையாட்டுத் திறன்மீது இந்திய அணியின் நிர்வாகம் திருப்தியும், மகிழ்ச்சியும் கொண்டிருக்கிறது.

தனிப்பட்ட முறையில் எனக்கு எது விருப்பம் என்று கேட்டால் 7ஆவது இடத்தைவிட்டு இன்னும் சற்று முன்னதாக இறங்கி கூடுதல் ஓவர்களை விளையாடுகிற வாய்ப்பைப் பெறவேண்டும் என்பதே என் விருப்பம். இவ்வாறு அவர் கூறினார்.

25 வயதான மொகமட் கைவ் இதுவரை 87 ஒருநாள் சர்வதேச போட்டிகளில் விளையாடி 1860 ஓட்டங்களை எடுத்துள்ளார். தன்னை இனியும் தொடர்ந்து 7ஆவது இடத்திலேயே அணி நிர்வாகம் இறக்கிவிடுவதாக இருந்தாலும் அதற்கும்தான் தயாராக இருப்பதாக கைவ் மேலும் தெரிவித்தார்.




சித்திரக்கதை

# தேவையா இது...?





# துருவன்





சிறுவர்களே! தாவரங்கள் கதைக்குமா? இதோ தாவரங்கள் கதைக்கின்றன. கவிதை மொழியில் வாசித்துப் பாருங்கள்.

## தாவரங்கள்

தூய காற்றும் நீரும்
தொடர்ந்து தருவேனே
பாயும் நீரைத் தடுத்து
பயன்பெறச் செய்வேனே.

இறந்த பின் [illegible]ம் பயனை
எரிக்க நல்ல விறகு - தந்து
சிறந்த சேவை செய்வேன்
மறந்திடாதீர் என்னை.

உண்ண உணவு அளிப்பேன்
உடுக்க ஆடை தருவேன்
வண்ண மலராய்ச் சோலையெங்கும்
வகை வகையாய்ச் சிரிப்பேன்.


மண்ணரிப்பைத் தடுத்து - அதை
வளம் பெறச் செய்வேன்
எண்ணெய் கரியாய் மாறி
எரிபொருளாவேனே.

கத்தி, கோடரி, அகப்பை
கைப்பிடியாவேனே - தாத்தா
கையில் கொண்டு செல்லும்
கைத்தடியாவேனே.

வெயிலுக்கு நிழலாய்
வீட்டுக் கூரையாக
நோய்க்கும் மருந்தாவேன் - வளர்த்து
நீண்ட பயன் பெறுவீர்.

கட்டுமரம் தோணிக் கப்பல்
கடலில் செல்லுதாம்
கரையில் பல வாகனங்கள்
கடந்து செல்லுதாம்.

அத்தனையிலும் எனது
உடலின் பகுதியாம்
அறிந்து கொள்வீரே
இதைத் தெரிந்து கொள்வீரே.






## கல்வி

காலம் எல்லாம் துணையாக
கல்வி என்னும் அழகுச் செல்வத்தை
பால பருவத்திலிருந்தே
படித்துப் படித்துத் தேடிடுவோம்.

போகும் வரை புகழுண்டு
சாகும் காலம் வரைக்கும் கல்விதனை
கருத்துடன் நாம் கற்றிடுவோம்.

பபிஸ்புடுலக்ஷி
தரம் - 9
உடுவில் மகளிர் கல்லூரி

# ஓவியப்போட்டியில் ஆறுதல் பரிசு பெற்றவர்களின் பெயர்களும் , ஓவியங்களும்.




சி.சிவபானுகா
தரம் - 6
யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.





லோ.ஷர்மினி
தரம் - 6
யா/ விக்னேஸ்வராக் கல்லூரி.

## உங்கள் கைவண்ணம்



ய.யசிந்தா பிரியங்கா
தரம் - 5
யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.



க.சக்தன்
தரம் - 7
கிளி/ பளை மத்திய கல்லூரி

## என்னைத் தெரியுமா?

எனது பெயர் தி.தயானந்தன். எனது தந்தையாரின் பெயர் க.திருஞானசம்பந்தர். தாயின் பெயர் தி.ஜெயராணி. நான் படிக்கும் பாடசாலை கொக்குவில் இந்துக் கல்லூரி. வகுப்பாசிரியரின் பெயர் திரு.யோ.ஜெகானந்தம். படிக்கும் வகுப்பு 9. நம்பிக்கை வைத்திருப்போர் பெற்றோர், கடவுள், ஆசிரியர்கள் ஆகும். எனக்கு மிகவும் பிடித்தது தன்னம்பிக்கை, வானொலி கேட்டல், பத்திரிகை வாசித்தல். மிகவும் பிடிக்காதது நம்பிக்கைத் துரோகம், ஏமாற்றுதல், பொய் கூறுதல் ஆகும். எனது குடும்பம் மிகவும் சிறிய அழகான 4 அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பம். இதில் அப்பா, அம்மா, தங்கையுடன் நானும் அடங்கும்.

தி.தயானந்தன்
தரம் - 9
கொக்குவில் இந்துக் கல்லூரி.

## பழமொழிகள்

1. கடவுளைநம்பினோர் கைவிடப்படார்.
2. நல்ல மரத்துக்கு ஒரு புல்லுருவி.
3. பணம் பாதாளம் மட்டும் பாயும்.
4. கொடிக்குக் காய் பாரமில்லை.






## அன்பு ஒன்றே போ



குளித்து முடித்துக் காலை உணவைச் சாப்பிட்
சதீஸ்.
அன்று மதியம் உணவு இடைவேளையின்
சதீஸிடைய வகுப்பறை ஜன்னல் வழியாய் எட்
அங்கே....
தன் நண்பன் ஒருவனுடன் அமர்ந்து சாப்பாட்டு
சதீஸ். அவன் நண்பனும் சாப்பாட்டுப் பார்சலை
சதீஸ் தன்னிடமிருந்த இரண்டு முட்டைகளில்
சாப்பிடு...!' என்று நண்பனின் சாப்பாட்டுப் பார்
சதீஸ்! இதுவரைக்கும் ஒரு முட்டை கொண்டு
முட்டை கொண்டு வந்தனீ...? என்றான் கும
ஒவ்வொரு நாளும் உனக்கொரு முட்டை கிடை
'வீட்டிலை என்ன சொல்லி இரண்டு முட்டை
'எனக்குச் சரியாப் பசிக்குது எண்டு பொய் சொ
'ஏன் சதீஸ்! இதெல்லாம் தேவையா? ஒரு வாரம
அன்பு வைச்சு அம்மாவிட்டப் பொய் சொல்லி
கொண்டு வரப்போறாய். இது உன்ர நல்ல ம
காகவும் எந்தச் சமயத்திலையும் பொய் சொல்
என்ர அம்மா எனக்குக் கட்டித்தாற சாப்பாடு
எங்கட குடும்பம் இருக்கிற நிலையில எண்ட
பெரிய விடயம்.
இதை ஒவ்வொரு நாளும் சாப்பிடுகிற நான்
லையில் முட்டை சாப்பிடுற பழக்கத்தை ஏற்படு
நாக்கு முட்டை கேட்கும்.
அப்ப என்ர அம்மாவால எனக்கு முட்டை வ
னொன்று ... ஒவ்வொரு நாளும் எனக்கொ
உங்கட குடும்பத்துக்கு அது ஒரு மேலதிகச் செ
யும் தயவு செய்து நீயே சாப்பிடு.. பின்னேரம் வீ
உண்மையைச் சொல்லி மன்னிப்புக் கேட்டுக்கெ
ஒண்றே போதும்...!
முட்டையை எடுத்து குமார் மீண்டும் சதீஸின்
குமார் சொன்னதைக் கேட்டு என்ன சொ
தவித்தான்.
சதீஸின் பாச உள்ளத்தையும் குமாரின் உய
யாய்க் கண்ட ஜெயாவின் விழிகளில் ஆனந்த



ா.ஷர்மினி
ம் - 6
விக்னேஸ்வராக் கல்லூரி.



## பழமொழிகள்

1. கடவுளைநம்பினோர் கைவிடப்படார்.
2. நல்ல மரத்துக்கு ஒரு புல்லுருவி.
3. பணம் பாதாளம் மட்டும் பாயும்.
4. கொடிக்குக் காய் பாரமில்லை.

# அன்பு ஒன்றே போதும்



'சதீஸ் போய்க் குளி பள்ளிக்கூடத்துக்கு நேரமாகுது ....! ' அவசரப் படுத்தினாள் அவனது தாய் ஜெயா.
படித்துக் கொண்டிருந்த புத்தகத்தை மூடி வைத்து விட்டு எழுந்த சதீஸ்
' அம்மா நான் உங்களிட்டை ஒண்டு கேப்பன் ... தருவிங்களா? ' என்று மெதுவாகக் கேட்டான்.
'என்னடா சதீஸ் வேணும்...?' அவனது தலையைத் தடவிய வாறே கேட்டாள் அம்மா
'இண்டைக்கும் எனக்கு மத்தியானச் சாப்பாடு கட்டித்தந்து விடு வீங்கள் தானே...?'
'ஓம்'
'அப்ப இண்டைக்கிருந்து இரண்டு முட்டை வைச்சு விடுறீங்களா?'
'ஏன் சதீஸ்'
'மத்தியானத்தில எனக்குச் சரியாப் பசிக்குது. தாங்க முடியேல்ல ... அதுதான்.
இவ்வளவு தானே. இண்டையில இருந்து சோறு கறியளோட இரண்டு முட்டையும் வைச்சு விடுறன். என்றாள் அம்மா.
'அம்மான்னா அம்மா... நல்ல அம்மா... தங்க அம்மா...!' என்று சொல்லித் தாயின் கன்னத்தில் முத்தமிட்டான். பின்னர் கும்மாளத் துடன் குதித்துக் கொண்டு குளிக்கச் சென்றான்.
'இந்த வருடத்தொடக்கத்தில இருந்து பள்ளிக்கூடத்துக்கு மத்தி யானச் சாப்பாடு கட்டிக் குடுக்கிறன். ஒவ்வொரு நாளும் சதீஸுக்குச் சாப்பிட ஒரு முட்டைதானே வைச்சு விடுகிறன். இது வரைக்கும் எதுவும் கதைக்காத இவன் - இப்ப ஏன் இப்படிச் சொல்லுறான்...? இதில ஏதோ இருக்குது. அதை இண்டைக்கு மத்தியானம் கண்டு பிடிக்கி றன்... !' என்று நினைத்தாள் ஜெயா.
தன் மகனுக்கு மத்தி யானச் சாப்பாடு கட்டி வைத்துவிட்டு வேறு வேலைகளில் ஈடு பட லானாள்.



குளித்து முடித்துக் காலை உணவைச் சாப்பிட்டு விட்டு, பாடசாலைக்குக் கிளம்பினான் சதீஸ்.
அன்று மதியம் உணவு இடைவேளையின் போது பாடசாலைக்கு வந்த ஜெயா சதீஸிடைய வகுப்பறை ஜன்னல் வழியாய் எட்டிப் பார்த்தாள்.
அங்கே....
தன் நண்பன் ஒருவனுடன் அமர்ந்து சாப்பாட்டுப் பார்சலைத் திறந்து கொண்டிருந்தான் சதீஸ். அவன் நண்பனும் சாப்பாட்டுப் பார்சலைத் திறந்தான்.
சதீஸ் தன்னிடமிருந்த இரண்டு முட்டைகளில் ஒன்றை எடுத்து 'குமார்! இதை நீ சாப்பிடு...!' என்று நண்பனின் சாப்பாட்டுப் பார்சலில் வைத்தான்.
சதீஸ்! இதுவரைக்கும் ஒரு முட்டை கொண்டு வந்த நீ இண்டைக்கு எதுக்கு இரண்டு முட்டை கொண்டு வந்தனீ...? என்றான் குமார். உனக்காகத் தான். இனி ஒவ்வொரு நாளும் உனக்கொரு முட்டை கிடைக்கும்! என்றான் சதீஸ்.
'வீட்டிலை என்ன சொல்லி இரண்டு முட்டை கொண்டு வாறாய்?
'எனக்குச் சரியாப் பசிக்குது எண்டு பொய் சொல்லி!'
'ஏன் சதீஸ்! இதெல்லாம் தேவையா? ஒரு வாரமா உன்னோட பழகிற என் மேல அன்பு வைச்சு அம்மாவிட்டப் பொய் சொல்லித் தானே எனக்கொரு முட்டை கொண்டு வரப்போறாய். இது உன்ர நல்ல மனசைக் காட்டினாலும், யாருக் காகவும் எந்தச் சமயத்திலையும் பொய் சொல்லுறது நல்ல பழக்கமில்லை.
என்ர அம்மா எனக்குக் கட்டித்தாற சாப்பாடு எனக்குப் பழகிப் போய்விட்டது. எங்கட குடும்பம் இருக்கிற நிலையில எண்ட அம்மா இதைத் தந்து விடுறதே பெரிய விடயம்.
இதை ஒவ்வொரு நாளும் சாப்பிடுகிற நான் உன் மூலமா தினமும் பாடசா லையில் முட்டை சாப்பிடுற பழக்கத்தை ஏற்படுத்தி விட்டா, வீட்டில போயும் என் நாக்கு முட்டை கேட்கும்.
அப்ப என்ர அம்மாவால எனக்கு முட்டை வாங்கி வைக்க முடியுமா..? இன் னொன்று ... ஒவ்வொரு நாளும் எனக்கொரு முட்டைநீ கொண்டு வந்தால் உங்கட குடும்பத்துக்கு அது ஒரு மேலதிகச் செலவு. அதால இந்த முட்டையை யும் தயவு செய்து நீயே சாப்பிடு.. பின்னேரம் வீட்டுக்குப் போனதும் அம் மாட்டை உண்மையைச் சொல்லி மன்னிப்புக் கேட்டுக்கொள். எனக்கு உன் னோட அன்பு ஒண்றே போதும்...!
முட்டையை எடுத்து குமார் மீண்டும் சதீஸின் சாப்பாட்டுப் பார்சலில் வைத்தான். குமார் சொன்னதைக் கேட்டு என்ன சொல்வதென்றே தெரியாமல் சதீஸ் தவித்தான்.
சதீஸின் பாச உள்ளத்தையும் குமாரின் உயர்ந்த பண்பையும் ஜன்னல் வழி யாய்க் கண்ட ஜெயாவின் விழிகளில் ஆனந்தக் கண்ணீர் திரண்டது.

## மூளைக்கு வேலை



ஒரு பொம்மை வியாபாரி வேடிக்கையாகக் கதைப்பார். அவரிடம் ஒரு பொம்மையின் விலை என்ன என்று ஜீவன் கேட்டான்.

அதற்கு அந்தப் பொம்மையின் விலையின் இரு எண்களைக் கூட்ட 3 கிடைக்கும். இந்த ஒரு எண்களையும் இடம் மாற்றிப் போட்டால் பொம்மையின் விலையை விட 9 அதிகமாகும் என்றார். அந்தப் பொம்மையின் விலை என்ன?

மயூரி இனிப்புக்கள் வாங்க கடைக்குச் சென்றாள். அவளிடம் இருந்த பணத்தில், முதல் கடையில் பணத்தில் பாதித்தொகைக்கு இனிப்புக்கள் வாங்கினாள். இரண்டாம் கடையில் மீதியுள்ள பணத்தில் பாதித் தொகைக்கு இனிப்புகள் வாங்கினாள்.

இப்பொழுது மயூரியின் கையில் மீதமாயிருந்தது ஒரு ரூபாய். ஆரம் பத்தில் மயூரியிடம் எவ்வளவு பணம் இருந்தது?

## சென்றவார விடைகள்

59 நிமிடத்தில் அதன் பின்னர் 60 ஆவது நிமிடத்தில் அவை இரட்டிப்பாகி ஆயிரம் லட்டுக்கள் கிடைத்து விடும்.

48 முக்கோணத்திற்கு வெளியில் உள்ள மூன்று எண்களும் பெருக்கப்பட்டுக் கிடைக்கும் விடையின் பாதியே முக்கோணத்திற்குள் அரப்பட்டுள்ளது.

## பொது அறிவு

அஞ்சல் அட்டையை அறிமுகப்படுத்திய நாடு எது?
அவுஸ்திரேலியா

இடி மின்னல் என வர்ணிக்கப்படும் நாடு எது?
பூட்டான்

பல்லுள்ள பறவை எது?
வெளவால்

உலகில் தேயிலையை முதன் முதலாக அறிமுகப் படுத்திய ஆண்டு எது?
1867 ஆம் ஆண்டு

பு.ஜெஸ்லி
தரம் -10
யா/ கரவெட்டி
விக்னேஸ்வரா கல்லூரி

## அறிந்து கொள்

☼ எகிப்திய பிரமிடுகளில் இருந்து எடுக்கப்பட்ட பல்வேறு பொருட்களில் 3 ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாகியும் கெடாமல் இருந்த உணவுப் பண்டம் தேன்.

☼ உலகின் மிகப் பிரபல ஓவிய மங்கை மோனலிஸாவின் உண்மைப் பெயர் லிஸா கியாகோண்டா (Lisa Giaconda)

## பழமொழிகள்

- சுடு கண்ட பூனை அடுப்பங்கரையை நாடாது.
- ஆறிய கஞ்சி பழங்கஞ்சி.
- அக்கரை மாட்டிற்கு இக்கரைப் பச்சை.
- ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
- ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு.
- இரக்கப் போனாலும் சிறக்கப் போ.
- ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது.
- உண்ணாச் சொத்து மண்ணாய்ப் போகும்.

இ.கம்ஷளா
தரம் - 6
உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

## விடுகதைகளும் விடைகளும்

1. வெள்ளை மாளிகைக்கு வாசல் இல்லை. வழியுமில்லை அது என்ன?

2. மூன்று கொம்பு மாடு ஒரு கொம்பால் முட்டுது. அது என்ன?

3. மரக்கிளையே தலையில் இருந்தாலும் மனம் கலங்கித் திரிவான். காட்டுக்குள் அவன் யார்?

4. படுக்க முடியாத பஞ்சு மெத்தை பசிக்கு உண வாகச் செய்த மெத்தை. அது என்ன?

5. ஒன்றுக்குப் பின் ஒன்றாய் வரும் மந்தை அல்ல. ஓயாத சத்தம் வரும் சந்தையும் அல்ல. அது என்ன?

6 கொண்டையிலே பூவுமுண்டு எடுக்க முடியவில்லை குதிக்காலில் முள் உண்டு பிடுங்க முடியவில்லை. அது என்ன?

7. கண் உண்டு செவி இல்லை. கண்டிடும் கேட்டிடும். அது என்ன?

மு. நிவிதா
தரம் – 3
யா/மாணிக்க
வாசகர்
வித்தியாலயம்.

### விடைகள்

1. கோழிமுட்டை
2. நெருஞ்சிமுள்
3. கலைமான்
4. பாண்
5. கடல்
6. சேவல்
7. பாம்பு



## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?
அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந்தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.
இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.
நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.
கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.
உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந்தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## இளந்தேனீக்கள் கழகம்


### விண்ணப்பம்

முழுப் பெயர் :........................................
கற்கும் பாடசாலை :........................................
கற்கும் தரம் :........................................
வீட்டு முகவரி :........................................
பிறந்த திகதி :........................................
ஆர்வமுள்ள துறைகள் :........................................


.................... ....................
திகதி ஒப்பம்

.................... ....................
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

## அம்மாவைத் தேடிச்செல்ல வழிகாட்டுங்கள்




## நிறம் தீட்டி மகிழுங்கள்



# நரியும் நாரையும்

நரி ஒன்று ஆற்றங்கரைக்கு வந்தது. ஆற்றங்கரையில் ஏதாவது உணவு கிடைக்கும் என்று நம்பியது. ஆனால் அங்கு ஒரு நாரைதான் தண்ணீரில் பாதிக்கால்கள் மறை யும்படி நின்றுகொண்டிருந்தது. நரி அங்கிருந்த ஒரு புதரில் பதுங்கிக்கொண்டது. நாரையை எப்படிப் பிடிக்கலாம் என்று யோசித்தது.

'நான் இருக்கும் இடத்துக்கு நாரை வரும் என்று காத்திருந்தால், நாள் முழுவதும் சென்றுவிடலாம். நாரையும் பறந்து



போய்விடும். அதை நெருங்கிப் பிடிப்பதுதான் நல்லது. அதற்கு என்ன செய்யலாம்?' என்று தனக்குள் யோசனை செய்தது.

நரிக்குத் தந்திரங்களுக்கு எப்போதும் குறைவில்லை. அது ஆற்றங்கரை ஓரமாக சிறிது தூரம் நடந்து சென்றது. ஆற்றங்கரையில் கோரைப் புற்களைக் கண்டது. தன் பற்களால் சத்தமின்றிக் கடித்தது. பிறகு அவற்றைச் சேர்த்து அகலமான கற்றையாக்கியது. அதை நீரில் விட்டது. கோரைக் கற்றை தண்ணீரில் மிதந்து, நாரை இருக்கும் பக்கம் சென்றது.


நாரை அதைக் கண்டு பயந்து பின்னால் சென்றது. பிறகு அதை வியப்போடு பார்த்தது. அது கோரைப் புற்கள்தான் என்று தெரிந்ததும், மறுபடியும் அது மீனைத் தேடத் தொடங் கியது. நரி இன்னொரு கற்றையைத் தயாரித்து அனுப்பியது. அது நாரையிடம் சென்றபோது அது திடுக்கிட்டுத் தெளிந்தது.

'தண்ணீரில் மிதந்துபோகும் கோரைப் புற்களைக் கவனிப்பதில் காலம் போக்கும் நான் அறிவிலி. பெருங்காற்றினால் அவை ஒடிந்து விழுந்து, மிதந்து போகின்றன' என்று சொல்லிக்கொண்டது நாரை. அப்போது அங்கு ஒரு மீன் வந்தது. நாரை மகிழ்ச்சியோடு அதைப் பிடித்து விழுங்கியது.

நரி மேலும் ஒரு பெரிய கோரைப்புற் கற்றையைச் செய்தது. கரையில் அதை வைத்து அதன் மேல் ஏறிக் கொண்டது. கோரைப்புற்களால் தன்னை நன்கு மூடிக் கொண்டது. தண்ணீர் தன்னை இழுத்துப் போகும் என்று பார்த்தது. அது முடியாது என்பதை உணர்ந்ததும் காலால் கரையை உதைத்துத் தண்ணீரில் கற்றையை இறக்கியது. அந்தக் கற்றை தெப்பம்போல் மிதந்து நகர்ந்தது.

அது நாரை அருகில் போகும்போது நாரை அதைப் பொருட்படுத்தவில்லை. முன்னர் வந்தவை போலத் தான் இதுவும் என்று எண்ணியது. அதைக் கவனிக்காமல் மீனைத் தேடத் தொடங்கியது. அங்கு வந்த ஒரு மீனைப் பிடிக் கக் கழுத்தை நீட்டியது. உடனே நரி அதைக் கவ்விப் பிடித்துக் கொண்டு நீந்திக் கரையேறியது. பிறகு நரி அந்த நாரையைக் கடித்துக்கொன்று தின்றது.

# கண்டுபிடிப்போமா



இரண்டு படங்களும் ஒரேமாதிரி இருக்கின்றன. ஆனால்இரண்டு படங்களுக்கும் இடையே ஆறு வித்தியாசங்கள் உண்டு எங்கே கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.



# வாத்துக்கு உதவி செய்யுங்கள்

தாய் வாத்து தன்னுடைய குட்டி வாத்துகளைக் குளத்துக்குக் கூட்டிக்கொண்டு போக விருப்பப்பட்டது. ஆனால் குட்டி வாத்துகள் எல்லாம் ஒவ்வொரு பக்கமாக நிற்கின்றன.

தாய் வாத்துக்கு உதவி செய்யுங்கள் எந்தெந்தத் திசையில் எத்தனை குட்டிவாத்துகள் நிற்கின்றன? மொத்தமாக எத்தனை குட்டிவாத்துகள் உள்ளன?


வடக்கு


கிழக்கு

தெற்கு

மேற்கு

மொத்தம்








## விடைகள்

வ - 7
கி - 6
தெ - 4
மே - 11
மொ - 28

# சிரியுங்கள்



ஜோன் : நான் நடக்க முடியாமல் ஒரு வருடமாக இருந்தேனடா?
சாள்ஸ் : ஐயய்யோ எப்படா?
ஜோன் : எனக்கு ஒரு வயதாகும் வரையடா

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

*வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்*
*துணைவலியும் தூக்கிச் செயல்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## கண்ணீர் சிந்தும் பேனா!

மீண்டும் ஒரு தடவை, கருத்தியல் யுத்தத்தை கருத்திய லால் முறியடிக்கும் திராணியற்ற அரசியல் அராஜகவாதிகளின் வன்செயல்களுக்கு மற்றுமொரு தமிழ் ஊடகவியலாளர் பலியாகியுள்ளார்.

அவருக்கு அரசதரப்பிலிருந்து எதிர்ப்பும், ஆயுதப்படையினரிடமிருந்து தொடர்ச்சியான அழுத்தத்துடன் கூடிய அச்சுறுத்தல்களும், அவர்களுடன் இணைந்தியங்கும் தமிழ் ஆயுதக்குழுக்களால் தொடர் கொலை மிரட்டல்களும் விடுக்கப்பட்டபோதும் அவரது பேனா தொடர்ந்து எழுதிக்கொண்டே இருந்தது.

எழுத்து அவருக்கு தொழில் மட்டுமல்ல... கடமையும் கூட அதனால்தான் அவரது எழுத்து மக்களிடம் மிகுந்த மதிப்பும், செல்வாக்கும் பெற்றதாக விளங்கியது.

எந்தப் பிரச்சினையையும் அவர் மேலோட்டமாக அணுக முயன்றதில்லை. ஆய்வு, பகுப்பாய்வு, தொலைநோக்கு மற்றும் தெளிவான தேடல், முயற்சி என்பன அவரது எழுத்தாளுமையின் பிரமிக்கத்தக்க வளர்ச்சிக்கு ஆதார தளமாக இருந்தது.

ஆங்கிலம் - தமிழ் இரு மொழிகளிலும் அவருக்கிருந்த புலமையானது இருமொழி ஊடகவியலாளராக அவரை உலகெங்கும் உணரவைத்தது. தேசிய அரசியல் மற்றும் இராணுவ பிரச்சினைகளை, வெறும் உள்ளூர் நிலைமைகளை வைத்தே ஆராயாமல் - அவற்றின் சர்வதேச பரிமாணங்களையும் மதிப்பீடு செய்து ஆய்வுத்தளத்தில் நின்று மக்களுக்கான தனது கருத்துக்களை உறுதியாகவும், துணிச்சலாகவும் முன்வைத்தவர் என்ற வகையில் அவரது எழுத்துக்களுக்கு ஒரு தனித்துவம் எப்போதும் இருந்தது.

அதுவே அவரை ஏனைய ஊடகவியலாளர்களிடம் இருந்து அதீத ஆளுமை கொண்ட ஒருவராக அடையாளப்படுத்தவும் செய்தது.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் தொடர்பான சகல விடயங்களையும் அதன் சகல பரிமாணங்களிலும் அறிந்து வைத்திருந்த அவர் - தனது ஒரு கால நிலைப்பாட்டினை மறுபரிசீலனை செய்து தன்னைச் சுயவிமர்சனத்திற்குள்ளாக்கியதில் தவறுகளைத் தவிர்த்து தமிழ்த் தேசியம் தொடர்பான தனது பற்றுறுதியுடன் கூடிய கொள்கைப்பிடிப்பை கடந்த சில வருடங்களாக தனது கட்டுரைகளில் வலியுறுத்திவந்தவர்.

இது தமிழர் விடுதலைப்போராட்டத்திற்கும், தமிழ்த் தேசியத்தின் எழுச்சிக்கும் எதிரான சக்திகளை அவர் மீது எரிச்சலும் சீற்றமும் கொள்ளவத்தது என்றே கூறவேண்டும்.

இந்த எரிச்சலும் சீற்றமும் அவரால் அலட்சியப்படுத்தபபட்டதுடன், அவர் தொடர்ந்தும் தனது எழுத்தை வலிமைப்படுத்தவும் செய்தார்.

சமாதான சூழல் உருவாகமுன் "தராகி" என்ற தர்மரத்தினம் சிவராம் தமிழ் மக்களால் அறியப்பட்டதைவிடவும், சமகால சமாதான சூழலில் அவரது எழுத்துக்களால் தமிழ் மக்கள் மத்தியில் பெருமளவில் அறியப்பட்டவரானார்.

ஒரு காலத்தில் புத்திஜீவிகள் மட்டத்தில் மட்டுமே பேசப்பட்ட அவரது எழுத்துக்கள் - அண்மைக் காலங்களில் சாதாரண மக்கள் மத்தியிலும் பேசப்படும் விடயமாக உயர் நிலையை எட்டியது.

தராகியின் அண்மைக்கால அரசியல் கட்டுரைகள் இராணுவம் மற்றும் பாதுகாப்புத் தொடர்பான எழுத்துக்கள் ஆளும் அதிகார வர்க்கத்தினருக்கு கடும் எரிச்சலை ஏற்படுத்தியதும் உண்மையே.

சர்வதேச நாடுகளில் நடைபெற்ற மாநாடுகளில் பங்குபற்றி ஈழத்தமிழர் பிரச்சினையை - தமிழீழ விடுதலைப் போரின் நியாயத்தன்மையை உலகறிந்துகொள்ள வைத்தவர்.

மட்டக்களப்பில் கருணா விவகாரம் தீவிர முற்றிருந்தபோது இவர் வீரகேசரி வார இதழில் எழுதிய "கருணாவுக்கு ஒரு கடிதம்" என்ற கட்டுரை பலராலும் மிகவும் பாராட்டிப் பேசப்பட்ட ஒன்றாகும்.

செய்திகளைத் தேடுவதிலும், அதுகுறித்து ஆய்வு செய்வதிலும் அவற்றைச் சரியான முறையில் வெளியிடுவதிலும் வல்லவரான தராகி - சர்வதேச ஊடகங்கள் பலவற்றுடனும் தொடர்புகொண்டிருந்த ஒருவராவார்.

கடந்த சில மாதங்களாக இவருக்கான அச்சுறுத்தல்கள், கொலை மிரட்டல்கள் இவர் மீதான அரசியல் - இராணுவ அழுத்தங்கள் அதிகமாக வந்துள்ளபோதும் அவரின் ஊடகப்பணியை அவற்றால் தடுக்கமுடிந்ததில்லை.

பல தடவை இவர் படைத்தரப்பால் விசாரிக்கப்பட்டார்.

கடந்த மே மாதத்தில் இவரது வீட்டைச் சோதனைக்குள்ளாக்க முயன்று படைத்தரப்பினர் பின்வாங்கிய சம்பவமும் நடைபெற்றதுண்டு.

இத்தகைய ஆளுமை - ஆற்றல்கொண்ட ஒரு தமிழ் ஊடகவியலாளரை படுகொல்ல செய்தோரின் நோக்கம் எதுவென்பது தெரியவில்லை. எனினும், தமிழ் ஊடகவியலாளர்கள் நிமலராஜன், ஜி.நடேசன் ஆகியோரைத் தொடர்ந்து தராகியும் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இது ஒரு அப்பட்டமான திட்டமிட்ட அரசியல் படுகொலை என்பதில் ஐயமே இல்லை.


இது தொடர்பாக இனி நடக்கப்போகும் விசாரணைகள் மற்றும் ஏனைய நடவடிக்கைகள் எல்லாமே வெறும் கண்துடைப்பு செயற்பாடுகளாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இந்த நிலையில் ஜி.நடேசனின் கொலையையடுத்து தராகி கூறிய வார்த்தைகளை இங்கு நினைவுபடுத்துவது நல்லதென நினைக்கிறோம்.

ஒரு நடேசனையோ அல்லது சிவராமையோ மண்டையில் போடுவதன்மூலம் கொலையாளிகள் தமது எந்த இலக்கையும் அடைந்துவிடமுடியாது என்பதே அதுவாகும்.

தராகியின் அந்த வார்த்தைகள் சத்தியமானவை என்பதை அவரின் பாதையில் ஊடகப்பணியைத் தொடரும் ஊடகவியலாளர்கள் தமது உறுதியான கடமையைச் செய்வதன்மூலம் உறுதிப்படுத்தவே செய்வர். அதுவே அவருக்கு செலுத்தும் அஞ்சலியுமாகும்.

## நாடும் நடப்பும்




'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# வெட்கக்கேடான கபடத்தனமான 'தராக்கி' சிவராமின் படுகொலை!

உலகறிந்த ஊடகவியலாளர் டி.சிவராம் தர்மதுவீபத்தின் தலைநகர் கொழும்பில் கபடத்தனமாகக் கடத்தப்பட்டுக் கோழைத்தனமா க் கொலை செய்யப்பட்டிருக்கிறார்.

சிறிலங்காவின் நாடாளுமன்றக் கட்டடம் சூழ்ந்த பகுதி நாட்டின் மிக உயர்பாதுகாப்புப் பகுதி. எவரும் சுலபமாக இந்தப் பகுதிக்குள் அதிலும் இரவில் நுழைந்துவிடமுடியாது. இந்தப் பகுதிக்குள்தான் சிவராம் கொல்லப்பட்டிருக்கிறார்.

குமார் பொன்னம்பலத்தின் கொலைபோல் சிவராமின் கொலையும் துப்புத் துலக்கப்படாமலே போகும்.

குமார் பொன்னம்பலம் அரசாங்கத்தின் நயவஞ்சக இன விரோதச் செயல்களை சிறிதும் அஞ்சாமல் மேடைகளிலும் சர்வதேச மாநாடுகளிலும் எடுத்துக் கூறிவந்தார். இதற்குப் பதில் சொல்லமுடியாதவர்கள் கபடத்தனமாக நயவஞ்சகத்துடன் அவரைக் கூட்டிச் சென்று பட்டப்பகலிலேயே கொழும்பில் மக்கள் நடமாட்டமுள்ள அதிலும் தமிழ் மக்கள் பெருமளவில் வாழ்கின்ற வெள்ளவத்தைப் பகுதியிலேயே சுட்டுக்கொன்றனர்.

'தராக்கி' என்ற புனை பெயரில் ஆங்கிலப் பத்திரிகைகளில் அரசாங்கத்தின் இனவிரோத நடவடிக்கைகளைப் புட்டுக்காட்டி தகுந்த ஆதாரங்களுடன் சிவராம் அஞ்சாமல் எழுதிவந்தார். சர்வதேச ஊடகவியலாளர்களின் மாநாடுகளிலும் அரசின் இனவிரோத நடவடிக்கைகளை எடுத்துக்கூறிவந்தார்.

சில மாதங்களுக்கு முன்னர்கூட அமெரிக்காவில் நடந்த ஒரு மகாநாட்டுக்குச் சென்று கலந்துகொண்டு திரும்பியிருந்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் விமானப்படை விமானங்கள் வைத்திருக்கின்றன என்று இன விரோதிகளும் பௌத்த சிங்கள மேலாண்மைவாத ஊடகங்களும் கூக்குரலிட்டபோது, உலகில் விடுதலைக்குப் போராடும் இயக்கங்கள் எப்படி விமானப்படை அணிகளைக் கொண்டிருக்கின்றன என்பதை ஒரு கட்டுரை மூலம் ஓர் ஆங்கிலத் தினசரியில் எழுதியிருந்தார்.

இடைக்கால நிர்வாகத் தன்னாதிக்க அதிகார சபை பற்றி விடுதலைப் புலிகளுடன் ரணில் அரசும் பின்னர் சந்திரிகா அரசும் பேச்சு நடத்தியபோது, இந்தப் பேச்சுவார்த்தைகள் எல்லாம் வெறும் பம்மாத்து, இவற்றினால் ஒன்றுமே நடக்கப்போவதில்லை, அரசியலமைப்பை மாற்றாமல் இடைக்காலத் தன்னாதிக்க அதிகார சபையை அமைக்கமுடியாது,

அரசியல் அமைப்பை மாற்றுவதற்கு நாடாளுமன்றத்தில் நான்கில் மூன்று பங்கு பெரும்பான்மை வேண்டும். எந்தச் சிங்கள பௌத்த மேலாண்மை வாதக் கட்சிகளும் இதற்கு ஆதரவு தெரிவிக்கமாட்டாதென்று சிவராம் ஆதாரபூர்வமாக எழுதியிருந்தார்.

இதுமட்டுமல்ல கடற்கோளினால் பாதிக்கப்பட்டு வடக்கிலும் கிழக்கிலும் அவலநிலையில் வாழுகின்ற மக்களுக்குப் புனர்வாழ்வும் புனரமைப்பும் அளிப்பதற்கு கிடைத்த உதவிகளைப் பங்கிடுவதற்காக விடுதலைப் புலிகளும் அரசும் சேர்ந்து பொதுக்கட்டமைப்பு அமைக்கப்படவேண்டுமென ஆரவாரப் படுத்தப்படுவதையும் சிவராம் கிண்டல் செய்தார். பொதுக்கட்டமைப்பு ஒன்று உருவாகமாட்டாது என்றும், இதனால் எவ்வித பயனும் இல்லையென்றும் சொன்னார்.

இப்போதைய அரசியல் அமைப்பில் மாற்றம் எதையும் செய்ய முடியாது என்று கூறும் சிங்கள பௌத்த மேலாண்மைவாதிகள் போர்நிறுத்தத்தில் எந்த மாற்றமும் இல்லாமல் தொடர்ந்திருக்க வேண்டுமென்றே விரும்புகின்றனர். போர்நிறுத்தத்தினால் சிங்களப் பெரும்பான்மையினரே அதிக நன்மை பெறுகின்றனர். தமிழ் மக்கள் இதனால் எந்த நன்மையையும் அடையவில்லை என்பதை சிவராம் தெளிவாகக் கூறியிருந்தார்.

கடற்கோளுக்குப் பின்னர் விடுதலைப் புலிகள் பலவீனமடைந்துவிட்டதாக சிறிலங்காப் படை வட்டாரங்களிலும் அரச வட்டாரங்களிலும் பலமாக நிலவிய கருத்தைத் தனது கட்டுரைகள் சிலவற்றின் மூலம் கிண்டல் செய்த 'தராக்கி', சிவராம், படைகளுக்கு இருக்கவேண்டிய தன்னம்பிக்கை சிறிலங்காப் படைகளிடம் இல்லவேயில்லை என்றும் சமீபத்தில் எழுதியிருந்தார்.

தமிழர் தாயகமான தமிழீழத்தின் மூலை முடுக்கெல்லாம் சிவராமுக்கு தண்ணிபட்டபாடு! எந்த நகரில், எந்தக் கிராமத்தில் எந்தெந்த சமூக மக்கள் எப்படி, எப்படி வாழ்கிறார்கள், அவர்களுடைய தொழில்கள் எப்படி நடைபெறுகின்றன, அவர்களுடைய வாழ்வை மேம்படுத்துவதற்கான வழிகள் என்ன என்பதெல்லாம் சிவராமுக்கு அத்துபடி!

நான் தினக்கதிர் பத்திரிகையில் பொறுப்பேற்றபின்னர் சிவராம் மற்றும் மட்டக்களப்பு ஊடகவியலாளர்கள் நடேசன், துரைரத்தினம்,சண்.தவராஜா, ஜெயானந்தமூர்த்தி ஆகியோர் கொக்கட்டிச்சோலைக்குச் செல்வதற்குத் திட்டமிட்டோம். கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் கோயில் தேர்த்திருவிழாவுக்கு முதல்நாள் மாலை நாங்கள் மோட்டார் சைக்கிள்களில் போனோம். மண்முனைத்துறையைக் கடந்து கொக்கட்டிச் சோலையில் இறங்கியதுதான் தாமதம் தமது மோட்டார் சைக்கிளை முறுக்கியபடி சுதந்திரக் காற்றைச் சுவாசிப்போம் என்று உரத்த குரலில் கோஷம் எழுப்பி வாகனத்தை வேகமாக முன்னெடுத்துச் சென்ற காட்சி இன்னும் என் கண்முன்னே காட்சியளித்துக்கொண்டிருக்கிறது.

போர்நிறுத்தத்துடன் மக்கள் மத்தியில் ஒருவித தொய்வு ஏற்பட்டிருப்பதாகக் கவலை தெரிவித்த சிவராம், தமிழீழ விடுதலைக்கு மீண்டும் மக்கள் மத்தியில் கடுமையான பிரசாரம் செய்து மக்களை உஷார்ப்படுத்தவேண்டியது அவசியம் என்றார்.

தமிழ்மக்கள் மத்தியிலுள்ள புத்திஜீவிகள், அறிவாளிகள் என்று தங்களைக் கருதிக்கொள்வோர்கூட இப்பொழுது போர் ஓய்வுக்குப்பின் போராட்டத்தின் தாக்கத்தையும், பயனையும் மறந்து ஒருவித திமிர்ப்போக்கில் செயற்படத் தொடங்கியிருப்பதாக ஆத்திரத்துடன் சொன்னார். சென்றவாரம் நான் அவருடன் தொடர்புகொண்டு யாழ்ப்பாணத்துக்கு சமீபத்தில் வரும் எண்ணம் உண்டோ என்று கேட்டேன். வருவதற்கு விருப்பம் இருக்கிறது. பஸ் பயணத்தை நினைத்தால் பயமாக இருக்கிறதென்றார். விமானத்தில்தான் வரவேண்டும் பார்ப்போம் என்றார்.

நான் பஸ்ஸில்தான் பயணம் செய்கிறென். எனக்கு அது அதிக கஷ்டமாகத் தெரியவில்லை என்றேன். எனது உடல் மெலிவாக இருப்பதால் பஸ் பயணம் அதிகம் பாதிப்பில்லை. உடல் பெருத்தவர்களுக்குச் சிறிது சிரமம்தான் என்றேன். அதை ஏற்றுக்கொண்ட சிவராம் உடல் இனி எங்கே உங்களைப் போல் மெலியப்போகுது என்று சொன்னார்.

சென்றமாதம் நான் மட்டக்களப்பில் சிறிது உடல்நிலை பாதித்திருந்த சமயம் வீட்டுக்கு வந்தார். அவருக்குப் பிரியமான இட்லியை இருவரும் பேசிக்கொண்டு சாப்பிட்டோம். மறுநாள் களுதாவளையில் ஒரு நண்பரைப் பார்க்க இருவரும் போகத்திட்டமிட்டோம். மோட்டார் சைக்கிளுடன் வருவதாகச் சொன்னார், காத்திருந்தேன். மறுநாள் காலை அவரது இடத்துக்கருகே ஒரு துப்பாக்கிச் சூடு நடந்தது எங்கள் பயணம் நிறைவேறவில்லை.

சிவராம் எந்த விடயத்தை எழுதினாலும் சரியான ஆதாரங்களுடன்தான் எழுதுவார். எவரும் அவற்றை மறுக்கமுடியாது. மேடைகளில பேசும்போதுகூட புத்திஜீவிகளாயிருந்தாலும்சரி அவர்களையும் காட்டமாகவே விமர்சிப்பார்.

தமிழ் மக்களுக்கு விடுதலைக்கு நல்ல யோசனைகளைத் தெரிவித்து வழிகாட்டக்கூடிய ஒரு நல்ல ஊடகவியலாரை, அனுபவமுள்ள அரசியல் விமர்சகரைத் தமிழீழம் இழந்து நிற்கிறது. புல்லுருவிகள் உதவியுடன் சிங்கள பௌத்த மேலாண்மை அவரைப் பலியெடுத்திருக்கிறது.

சிவராமைக் கபடத்தனமாகப் படுகொலை செய்ததன் மூலம் அரசும், புலனாய்வுத் துறையும் உலகில் அவமானத்தைத் தேடிக் கொண்டிருக்கிறது.

உலகறிந்த ஊடகவியலாளர் சிவராம் தமது உயிரைக் கொடுத்தும் இலங்கை அரசின் இனவெறியையும் கையாலாகாத் தனத்தையும் வெட்கக்கேட்டையும் வெளிக்காட்டியிருக்கிறார்.

இனவெறியர்களுக்கு இது எங்கே உறைக்கப்போகிறது. அவர்களுக்கு மட்டுமல்ல தமிழர் என்று சொல்லிக்கொண்டு இன்னும் நாக்கைத் தொங்கவிட்டிருப்போருக்குமாவது உறைக்குமா, தன்மானம் தட்டியெழுப்புமா?


அரசியற்கட்டுரை

சிலம்பு



# அக்கா சந்திரிகாவின் பதவிக்கான நகர்வும் தம்பி அநுராவின் எதிர்பார்ப்பும்





நேற்றைய தொடர்ச்சி...

இரண்டு முறைகளுக்கு மேல் ஒருவர் நிறைவேற்று அதிகாரத்துடன் ஆட்சியில் தொடர்வது சர்வாதிகாரத்துக்கு ஒப்பாகும். ஜனநாயகம் கேலிக்குரியதாகி விடும் என்ற கருத்திலேயே அந்த அமைப்பு யாப்பில் இடம் பெற்றுள்ளது. இல்லாவிடின், எவரும் விரும்பிய காலம் வரை இருக்கலாம் என்றால், காலம் குறிப்பிடப்படாமல் விட்டிருக்கலாம். இதைவிடுத்துத் தேர்ந்தெடுக்கப்பட்டுத் தான் ஜனாதிபதி பதவிக்கு இரண்டு முறைக்கு மேல் வரக் கூடாது. வேறொருவர் போட்டியிட்டு வென்றதன் பின் பதவியிலிருந்து விலக பின் கதவால் அந்தப் பதவிக்கு வரமுடியுமா? இது நீதியா? என்று மனச்சாட்சி இருந்தால் கேட்டுப் பார்க்க வேண்டும்.

ஜனாதிபதிப் பதவியை ஒழிக்கப் புறப்பட்ட ஒருவர் - அதை முற்றாக மக்களிடமிருந்து மறக்கச் செய்து விட்டு, மூன்றாவது முறையாகவும் ஜனாதிபதியாகப் பின்கதவால் நுழைய முனைவது சிங்கள மக்களைக் கிள்ளுக் கீரைகளாக நினைக்கின்றார் என்று தானே கூறடியும். இதை விட இதிலுள்ள சிக்கல்கள் எவை என்றும் பார்க்க வேண்டியுள்ளது.

முதலில் சந்திரிகாவால் நிறுத்தப்படுபவர் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற வேண்டும். தற்பொழுது ரத்தினசிறிவிக்கிரமநாயக்கவின் பெயரே அடிபடுகிறது. சந்திரிகாவின் நம்பிக்கைக் குரியவராக அவர் இப்போது நிகழ்கின்றார். இவரை மகிந்த ராஜபக்ஷ ஏற்றுக்கொள்வாரா? அவரது பிரத மர் பதவியை அல்லவா வேட்டு வைத்து இந்த நகர்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அடுத்தது, சென்ற தேர்தலில் நாடாளுமன்ற உறுப்பினராகவே வரமுடியாது தோற்றுப் போனவர் ஜனாதிபதியாகப் போட்டியிட்டு வெற்றி பெறுவாரா?

ஜே.வி.பி இந்தத் திட்டத்தை ஏற்குமா? அல்லது தாங்களும் ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிடுவார்களா? அல்லது பிரதமர் பதவி தமக்குத் தர வேண்டும் என்று நிபந்தனை விதிப்பார்களா? இந்தளவு கேள்விகளும் மண்டைக்குள் குடைந்து கொண்டிருக்கிறது. இவற்றுக்கு விடை கிடைக்காத நிலையில், சந்திரிகா முதலில் கூறியவாறு குழப்பமாகவும், முரண்பாடாகவும் பேசியுள்ளார்.

இதேநேரம் தம்பியார் அநுரா - ஜே.வி.பியைக் கண்டிக்கக் கூடாதென்று யாரைச் சுட்டிக் காட்டியுள்ளார். அக்கா, மேடைகளில் பேசுவதையும் கண்டிக்கிறாரா? என்றும் சிந்திக்க வேண்டியுள்ளது. அக்காவுக்கு அடுத்ததாகக் குடும் பப் பாரம்பரிய முறையில் - தான் ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிடலாம் என்றிருந்தவர். அக்கா சந்திரிகா அதற்கு இடம் கொடுப்பதாக இல்லை. சரி அதை விடுவோம். அக்காவோடு பிரதமர் பதவியிலிருக்கலாம் என்றால், அவரது அரசியல் பால்ய நண்பர் மகிந்த ராஜபக்ஷ இடம் கொடுக்கிறாரில்லை. எனவே தான் பிரதமர் பதவியும் - ஜே.பி.வியால் தான் கிடைத்ததாக மகிந்தராஜ பக்ஷவுக்குக் கூறி வருகிறார். ஜே.வி.பியை அரவணைத்தால் தான் தன் அரசியல் எதிர்காலம் சுபீட்சமாக இருக்கும் என்று நம்புகிறார்.

எனவே ஜே.வி.பியைக் கண்டிக்கக் கூடாதென்ற நிலைப்பாட்டில் அநுரா உள்ளார். அதே நேரம் அக்கா சந்திரிகாவையும் கையில் பிடித்திருக்க வேண்டும் என்ற நிலைப்பாடும் அவருக்கு உள்ளது. சில வேளை அக்காவின் திட்டங்கள் தோல்வியடைந்து, சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஜனாதிபதி வேட்பாளராக யாரை யாவது நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டால், தான் அப்பொழுது அக்காவின் ஆதரவுடனும், ஜே.வி.பியின் ஆதரவுடனும் ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிடலாம் என்ற நப்பாசையில் அவர் உள்ளார். இதனால் அவர் மேற்கண்டவாறு கூறி வருகிறார்.


இதே நேரம் இலங்கை சுதந்திரக் கட்சியுடன் பொது ஜன ஐக்கிய முன்னணியில்இணைந்துள்ள இடதுசாரிகள் ஜனாதிபதி வேட்பாளர் யார்? என்று அறிவிக்குமாறு கேட்டுள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சி பல மாதங்களுக்கு முன்னரேயே ரணில் தான் தங்கள் ஜனாதிபதிக்கான வேட்பாளர் என்று உத்தியோக பூர்வமாக அறிவித்துவிட்டது. எனவே சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஜனாதிபதி வேட்பாளரை அறிவிக்க வேண்டும் என்பது இடதுசாரிக் கட்சிகளின் நிலைப்பாடாக உள்ளது.

இதற்கான பதிலைக் கொடுக்க முடியாத நிலையில் சந்திரிகா இருக்கிறார். தனது நிலையைச் சரிவரத் தீர்மானிக்க முடியாமல் உள்ளதால், பொதுஜன ஐக்கிய முன்னணியில் உள்ள இடது சாரிகளையும் அவரால் சமாளிக்க முடியாமல் உள்ளார்.

ஒரு சிங்களப் பிரமுகர் சில காலத்துக் முன்னர் கூறிய ஒரு கருத்து இங்கு நினைவு கூரத்தக்கது. இந்த நாட்டின் எதிர்காலச் சுபீட்சம் பற்றிச் சிந்திக்கக் கூடிய ஒருவர் - சிங்கள இனத்தில் இது வரை தோன்றவில்லை. அவ்வாறான ஒருவர் சிங்கள இனத்தில் எப்பொழுது தோற்றம் பெறுகிறாரோ, அப்பொழுதுதான் இந்த நாடு வளமான நாடாக மாறும் என்று கூறியிருந்தார். அவர் இந்தக் கருத்தைக் கூறிய பொழுது இனப்பிரச்சினையையும் கருத்தில் வைத்தே கூறியிருந்தார். இவ்வாறு ஒருவர் சிங்கள இனத்தில் 60 ஆண்டுகளுக்குத் தோற்றம் பெறவில்லை, இனிமேலும் தோற்றம் பெறுவாரா என்பது சந்தேகமே.

குழம்பிப் போயுள்ள சிங்கள அரசியல் நிலைமைகள் தமிழினத்தையே இறுதியில் பகடைக் காய்களாக்கும். சிங்கள மக்களின் கவனத்தைத் திசை திருப்பத் தமிழினத்தின் மேல் இறுதியில் யுத்தத்தைத் திணிப்பதாகவே அமையும். அதனால் தான் ரத்தின சிறிவிக்கிரமநாயக்க மக்கள் யுத்தத்தை விரும்பினால் யுத்தம் நடைபெறும் என்று கூறினார்.

இதன் கருத்து மீண்டும் சிங்களம் சமாதானத்தை விடுத்து, யுத்தத்துக்குச் செல்ல முற்படுகிறது என்பதேயாகும். புலிகளின் மேல் பழியை எவ்வாறு போடலாம். யுத்தத்தை எவ்வாறு தொடங்கலாம் என்று அவர்கள் திட்டம் தீட்டி ஆயத்தங்கள் செய்வது போல் தெரிகிறது. சிங்களத்துடன் இணைந்திருப்பதால் தான் சிங்களத்து அரசியல் குழப்பங்கள் தமிழ் மக்களையும் பாதிக்கிறது என்று புலனாகிறது.



# புத்தாண்டு உங்களுக்கு எப்படி?

## தனுசு

தனுசுராசி அன்பர்களே!

இந்தத் தமிழ்ப் புத்தாண்டு சுமாராக இருக்கும். ஆண்டின் தொடக்கத்தில் சிற்சில பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டிவரலாம். ஆனால் அது படிப்படியாக மறைந்து, பிற்பகுதியில் முன்னேற்றங்கள் பலவற்றைக் காணலாம். தற்போது சனி பகவான் 7 ஆம் இடமான மிதுனத்தில் உள்ளார். இது சிறப்பானது அல்ல. அவர், குடும்பத்தில் பிரச்சினையை ஏற்படுத்திக் கொண்டிருப்பார். அந்தச் சனி ஜூன் 26 ஆம் திகதி கடகத்துக்குச் செல்கிறார். இது அஷ்டமனம் ஆகும். இதுவும் சிறப்பான இடம் அல்ல. அதன் பின்னர் அவர் உங்கள் முயற்சிகளில் தடைகளை ஏற்படுத்துவார். நிழல் கிரகங்களான ராகுவும், கேதுவும் இந்த ஆண்டு முழுவதும் நன்மை செய்யும் இடத்தில் இல்லை. ராகு 4 ஆம் இடத்தில் நின்று உங்களை அலைக்கழிக்கலாம். கேது 10 இல் இருந்து எதிரிகளால் இன்னலை உருவாக்கலாம். இன்னொரு அதிமுக்கியமான கிரகமான குருபகவான் தற்போது கேதுவுடன் இணைந்திருப்பது அவ்வளவு சிறப்பு அல்ல. அவர் பொருள் விரயத்தை ஏற்படுத்தலாம். ஆனாலும் அவரது 5 ஆம் இடத்துப் பார்வையால், உங்களுக்கு வரக்கூடிய பிரச்சினைகளைத் தடுத்து நிறுத்தி, வெற்றி கொள்ளச் செய்வார். குருபகவான் செப்ரெம்பர் மாதம் 19 ஆம் திகதி பெயர்ச்சி அடைந்து, 11 ஆம் இடம் வருகிறார். இது உன்னத நிலை ஆகும். அதன் பின் அவர் பல்வேறு விதத்தில் உங்களை உயர்வுக்குக் கொண்டு வருவார்.

மேற்கண்ட நிலையில் இருந்து பார்க்கும் போது, ஆண்டின் முற்பகுதியில் குருவின் பார்வையாலும் பிற்பகுதியில் குருவின் பலத்தாலும் நன்மைகள் பெறலாம். மேலும் சூரியன், செவ்வாய், புதன், சுக்கிரன், சந்திரன் ஆகிய கிரகங்களினால் அவ்வப்போது நன்மை கிடைக்கப் பெறலாம். அந்தவகையில் விரிவான பலனைக் காணலாம்.

ஏற்கனவே நாம் கூறியபடி எந்தக் காரியத்தையும் சிறப்பாகச் செய்து முடிக்கச் சற்று சிரத்தை எடுக்க வேண்டிவரும். எதிரிகளின் இடையூறு அவ்வப்போது தலைதூக்கலாம். ஆனால் குருவின் 5 ஆம் இடத்துப் பார்வையால், எதையும் முறியடித்து வெற்றி காண்பீர்கள். பொருளாதார வளம் சீராக இருக்கும். செலவுகள் அதிகரிக்கலாம். எனவே சிக்கனம் தேவை. செப்ரெம்பருக்குப் பிறகு உங்கள் செல்வாக்கு உயரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். வீடு, மனை வாங்க யோகம் பிறக்கும்.

குடும்பத்தில் நிலைமை சிறப்படையும், தேவைகள் பூர்த்தியாகும். தம்பதியினரிடையே அன்பு நீடித்தாலும், வீட்டில் சிற்சில பிரச்சினைகள் வந்து மறையும். ஆனால் ஜூன் மாதத்துக்குப் பிறகு பிரச்சினை அகலும். பிரிந்த குடும்பம் ஒன்றுசேரும். மேலும் இது தொடர்பாகக் குடும்பத்தை வெளியூர் மாற்றும் சூழ்நிலை உருவாகலாம். செப்ரெம்பருக்குப் பிறகு திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகள் நடக்கும். தடைப்பட்டு வந்த திருமணம் கைகூடும். சிலர் வசதியான வீட்டுக்கு குடிபுகுவர். வாகன சுகம் கிடைக்கும்.

உத்தியோகம் பார்ப்பவர்கள் தற்போது சீரான நிலையில் இருக்கிறீர்கள். குருவின் பார்வையால் எந்த இடையூறையும் சமாளித்து வெற்றி நடை பூண்டு வருகிறீர்கள். ஆனாலும் உங்களுக்குள் ஏதோ ஒரு மனக்குறை வருத்திக் கொண்டிருக்கும். சிலர் சுதாகரிப்பும், விவேகமும் இல்லாததால் பொறுப்பை இழக்க நேரிடலாம். செப்ரெம்பர் மாதத்துக்குப் பிறகு உங்கள் நிலையில் முன்னேற்றம் காண்பீர். தடைப்பட்ட பதவி உயர்வு, சம்பள உயர்வு போன்றவை கிடைக்கும். விரும்பிய இடத்துக்கு மாற்றம் பெறலாம். கோரிக்கைகள் நிறைவேறும். வேலை நிமித்தமாகக் குடும்பத்தை விட்டுப் பிரிந்தவர்கள் ஒன்று சேருவர்.

வியாபாரிகள் சுமாரான நிலையிலேயே இருப்பீர்கள். உழைப்புக்குத் தகுந்த லாபம் கிடைக்கும். புதிய முதலீடு எதுவும் வேண்டாம். எதிரிகள் வகையில் சற்றுக் கண்ணும் கருத்துமாக இருப்பது நல்லது. தீயோர் சேர்க்கையால் அவதிப்பட்டு வந்தவர்கள் ஜூன் மாதத்துக்குப் பிறகு அவர்கள் பிடியில் இருந்து விடுபடுவர். செப்ரெம்பருக்குப் பிறகு சிறப்பான வளர்ச்சி அடைவீர்கள். குறைந்த முதலீட்டில் புதிய தொழில் தொடங்கலாம். பத்திரிகைத் தொழில், தானியவியாபாரம், பலசரக்குக் கடை போன்றவை நல்ல லாபத்தைக் கொடுக்கும். கூட்டாளிகளிடையே ஒற்றுமை ஏற்பட்டுத் தொழிலை விருத்தி அடையச் செய்யலாம்.

கலைஞர்களுக்கு முயற்சியின் பேரில் புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். ஆனால் எதிர்பார்த்த புகழ், பாராட்டுப் போன்றவை கிடைக்காமல் போகலாம். ஆண்டு இறுதியில் அரசிடமிருந்து விருது பாராட்டுப் போன்றவை கிடைக்கப் பெறலாம். பொதுநல சேவகர்கள், அரசியல்வாதிகள், ஆண்டின் பிற்பகுதியில் இழந்த பதவியைப் பெறலாம்.

மாணவர்கள் தற்போது முயற்சிக்கு ஏற்ற பலனையே கண்டு கொண்டிருப்பீர்கள். சிலர் கெட்ட மாணவர்களோடு சேர்ந்து கல்வியில் தேக்க நிலையை அடைந்திருக்கலாம். அடுத்த கல்வி ஆண்டு மிகவும் சிறந்ததாக அமையும். விரும்பிய பாடங்கள் கிடைக்கும். விவசாயிகள் சுமாரான வருவாயைக் காண்பர். செப்ரெம்பருக்குப் பிறகு நெல், மஞ்சள், கோதுமை, சோளம், கேழ்வரகு, பழவகைகள் போன்றவை மூலம் நல்ல பலனைப் பெறலாம்.

பெண்கள் திருப்தியுடன் காணப்படுவீர்கள். ஆண்டின் தொடக்கத்தில் சிற்சில விடயங்களில் விட்டுக் கொடுத்துப் போகவும். உஷ்ணம், தோல், தொடர்பான உபாதைகள் வரலாம்.

**பரிகாரம்:-**

சனி பகவானுக்கு அர்ச்சனை செய்து வழிபடுங்கள். தினமும் காக்கைக்கு அன்னம் படையுங்கள். சனிப் பெயர்ச்சி நாளில் சனி பகவானைத் தரிசனம் செய்யுங்கள். நாகதேவதை உள்ள கோவிலுக்குச் சென்று வாருங்கள்.

### தமிழ்த்தேசியத்தை வளர்த்தெடுப்பதில்

# சிவராமின் கட்டுரைகள் சிறந்த பங்களிப்பைச் செய்துள்ளன

## கண்டன செய்தியில் சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி.

தமிழ்த்தேசியத்தை வளர்த்தெடுப்பதில் சிவராமின் ஆய்வுக் கட்டுரைகள் மிகச்சிறந்த ப[illegible]ளிப்பைச் செய்துள்ளன. இவ்வாறான ஒரு வ[illegible]ரைக் கொலை செய்தமையானது மக்களுக்கு உண்மையான செய்திகள் சென்றடைவதை விரும்பாதோரின் செயற்பாடாகவே இருக்குமென, ஊடகவியலாளர் சிவராமின் கொலையைக் கண்டித்து நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது –

மிகப் பரந்த வாசிப்பு பழக்கமுள்ள சிவராம் இராணுவ, புலனாய்வு நடவடிக்கைகளை மாத்திரமன்றி, இலங்கை இனப்பிரச்சினையில் இந்திய, அமெரிக்க, சீனத் தலையீடுகளையும், அவ[illegible] நலன் சார்ந்த விடயங்களையும் ஆ[illegible]ய்தெழுதியவர். சிங்கள பௌத்த பெ[illegible]சியவாதம், அதற்குள் இருந்து சிங்கள[illegible]ால் மீள முடியாத நிலை, ஜே.வி.பியின்[illegible]வாத வங்குரோத்து தன் அரசியல் [illegible]ாகவும், தமிழர் தரப்பின் தவறுகள் தொ[illegible]ாகவும் மிகக்கடினமாக விமர்சித்து வந்து[illegible]ளார்.

இ[illegible]ரது வீடு பலமுறை அரச புலனாய்வுத் துறை, மற்றும் பொலிஸாரின் சோதனைக்குட்படுத்தப்பட்டது. இவருக்கு அரசுடன் இயங்கும் தமிழ் குழுக்களிடம் இருந்தும், அக்குழுக்களின் பெயரைப் பாவித்து கொலைகளைக் கட்டவிழ்த்துவிடும் ஆயுதப் படைகளின் பல்வேறுபட்ட அங்கங்களில் இருந்தும் பலமுறை கொலை மிரட்டல்கள் வந்துள்ளன.

கொழும்பின் மத்திய பகுதியில் இருந்து ஆடம்பர வாகனமொன்றில் கடத்தப்பட்ட இவர் நாடாளுமன்றத்துக்கு பின்புறமாகவுள்ள இடத்தில் கொலை செய்யப்பட்டு வீசப்பட்டார் என்பது, கொழும்பையும், அதன் சுற்றுப்புறங்களையும் அறிந்த, சகல வசதிகளையும் கொண்ட ஒரு குழுவினராலே நடத்தப்பட்டிருக்கின்றதென்பதை வெளிப்படுத்துகின்றது.

கிழக்கு மகாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட கொலைகள் படிப்படியாகக் கொழும்பு நகரையும் வந்தடைந்துள்ளது. இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கோ, அரசியல் ஸ்திரத்தன்மைக்கோ இது ஆரோக்கியமான சூழலாகத் தோன்றவில்லை.

ஜே.வி.பியினதும், ஜாதிக ஹெல உறுமயவினதும், இன்னும் பல்வேறுபட்ட குழுக்களும், தமிழனுடன் பேசாதே, தமிழனுக்கு உரிமைகளைக் கொடுக்காதே என்று கூக்குரலிடும் நேரத்தில் சிவராமின் கொலையும் நடந்தேறியுள்ளது. இதன் மூலம் தமிழர் கருத்துக்கு வாய்ப்பூட்டுப் போடலாம் என நினைத்தால் அது முடியாத காரியமாகும். தமிழருக்கெதிராக பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் இனக்கொலைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன, கிராமம் கிராமமாக தமிழ் மக்கள் சிங்களக் காடையர்களால், ஆயுத பாணிகளால் கொலை செய்யப்பட்டார்கள். ஆனால், ஒவ்வொரு முறையும் பீனிக்ஸ் பறவைபோல் மீண்டெழுந்தே தமிழன் வந்துள்ளான்.

உண்மைகளைத் தெரிந்துகொண்டு சிவராமின் கொலையாளிகளைக் கண்டுபிடிக்கும்படி நாம் அரசிடம் கேட்டால், நாம் முட்டாள்களாகி விடுவோம். தமிழ்த் தேசியத்தின் உரிமைக்குரலாகச் செயற்பட்டு, தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுக்கொள்வதே நாம் சிவராம் அவர்களுக்குச் செலுத்தும் அஞ்சலியாகும்.

அன்னாரின் இழப்பால் துன்புற்றிருக்கும் அவரது துணைவியாருக்கும், குழந்தைகளுக்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

### தமிழ்த்தேசிய பற்றாளர்களை

# நிழல் யுத்தத்தின் மூலம் [illegible]ரசு அழித்து வருகின்றது

## [illegible]மிழ் மாணவர் ஒன்றியம்

[illegible]நிறுத்தம் என்ற போர்வைக்குள் தமிழ[illegible] கைகளைக் கட்டி நிழல் யுத்தம் மூலம் [illegible]சியப் பற்றாளர்களை அரசாங்கம் [illegible]ருவது தமிழ் மக்களை சீண்டுகின்ற[illegible]ன, ஊடகவியலாளர் சிவராமின் [illegible]க் கண்டித்து யாழ்.மாவட்ட தமிழ் [illegible]றியத்தினர் விடுத்துள்ள கண்டன [illegible] தெரிவித்துள்ளனர். அந்த அறிக்[illegible]ம் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது –

[illegible]டத்தி[illegible] கொலைசெய்யப்பட்ட மூத்த [illegible]கையாளர் டி.சிவராமின் கொலைச் சம்ப[illegible]த வன்மையாகக் கண்டிக்கிறோம். தமிழி[illegible]ன் இன்னல்களையும், பேரினவாதத்தால் [illegible]க்கப்படுகின்ற அநீதிகளையும் உலகிற்கு [illegible]துக்காட்டிய உன்னத மனிதரை தமிழ[illegible]ள் இழந்து தவிக்கின்றனர்.

[illegible]அடக்குமுறைகளும், அநீதிகளும் தமிழ் மக்[illegible]மீது திணிக்கப்படும். தமிழர்கள் வாய் பொத்[illegible]களாக அடங்கி வாழவேண்டும் இதுதான் பேரினவாதிகள் காலங்காலமாகக் காட்டிவரும் நிலைப்பாடு.

தமிழ்ப்பத்திரிகையாளர்கள் இன்னல்களுக்கும் இடர்பாடுகளுக்கும் மத்தியில் குரல் கொடுப்பவர்கள். அடிமைத்தனத்திற்கு எதிரான அவர்களின் குரல் கொடுப்பில்தான் தேசம் விடிவை நோக்கி நகருகின்றது. காலம் காலமாக தமிழ் மக்கள் சிங்கள இனவெறியர்களின் இரும்புக் கரங்களினுள் நசுக்கப்படுவதனை உலகுக்கு எடுத்துக்காட்டிய நிமலராஜன், நடேசன் போன்ற பத்திரிகையாளர்களைக் கொலை செய்த பேரினவாத அரசு, தமிழ்த்தேசியத்துக்காகக் குரல்கொடுத்த சிவராம் அவர்களை பலமுறை அச்சுறுத்தி பின் கடத்திக் கொலை புரிந்திருக்கிறது.

இந்தக் கொலைச் சம்பவத்தை மாணவர்களாகிய நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

அநீதியாளர்களுக்கு அஞ்சாது துணிச்சலுடன் குரல்கொடுத்த மூத்த பத்திரிகையாளரின் கொலைச்சம்பவத்தின் முழுப்பொறுப்பையும் அரசாங்கமே ஏற்கவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஊடக சுதந்திரத்தை உலைவைக்கவே இந்தக் கொலைகள் தொடர்கின்றன

## ஈழவேந்தன் எம்.பி.

இலங்கையில் சுதந்திரமாக கருத்துத் [illegible]விக்கின்ற ஊடகவியலாளர்கள் இனவெறியர்களால் சாகடிக்கப்பட்டு வருகின்றமையானது ஊடக சுதந்திரத்திற்கு உலைவைக்கும் நிகழ்வுகள், நாட்டில் தொடர்ந்து நடைபெற்று வருவதனையே எடுத்துக்காட்டுவதாக ஊடகவியலாளர் [illegible]ிவராமின் கொலையைக் கண்டித்து வெளி[illegible]ட்ட அறிக்கையில் நாடாளுமன்ற உறுப்பினர் [illegible].க.ஈழவேந்தன் தெரிவித்துள்ளார். அவர் [illegible]னது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ள[illegible]வது.

ஊடகவியலாளர்களான றிச்சட்டி சொய்சா, [illegible]மலராஜன், நடேசன் ஆகியோர் சுட்டுக்கொல்[illegible]ப்பட்டமை எல்லாம் ஊடக சுதந்திரம் உலை[illegible]வக்கப்படுவதனையே எடுத்துக்காட்டுகின்றது.

அண்மையில் சிவராம் இல்லாதவேளை[illegible]யில் அவரின் இல்லத்தில் புலனாய்வுப் பிரிவினர் சோதனை நடத்தி அவரின் மனைவி மக்களைத் துன்புறுத்திய செய்தி, இவரின் இந்த சாகடிப்போடு புலனாய்வுப் பிரிவின் செயற்பாடு குறித்து பல கேள்விகளை எழுப்புகின்றன.

இவ்வாறு தொடர்ந்து நடைபெறும் கொலைகளை பார்த்துக்கொண்டிருக்க முடியாது. மாறாக நாம் கூட்டாக குரல் எழுப்பி இதற்கு செயல் வடிவம் கொடுத்து இந்த அநியாய சாகடிப்புகளை தடுத்து நிறுத்தியே ஆகவேண்டும். இதனை தடுத்து நிறுத்த நாம் தவறுவோமாயின், எம்மைப் பழி சூழ்வது ஒருபுறமிருக்க நாமே இவ்வெறிச் செயலுக்குப் பலியாகும் ஆபத்தும் உண்டு. எனவே அனைவரும் இந்தக் கொடிய கொலைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க உடன் நடவடிக்கையில் இறங்க வேண்டுமென அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### றிச்சட் டி சொய்சாவின்

# அரசியல் கொலையை போன்றதே சிவராமின் படுகொலையுமாகும்!

## சுனந்த தேசப்பிரிய

**ஊடகவியலாளர் சிவராம் கொலை செய்யப்பட்டதனைக் கண்டித்து. ஊடக அமைப்புகளின் பிரதிநிதிகள் வெளியிட் டுள்ள கண்டனங்கள்.**

ஊடகவியலாளர் றிச்சட் டி சொய்சாவின் அரசியல் கொலையைப் போன்றதே, சிவராமின் கொலையென சுதந்திர ஊடக அமைப்பின் ஏற்பாட்டாளர் சுனந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். அத்துடன், சிவராமின் கொலை தொடர்பாக சுதந்திர ஊடக அமைப்பு தனது கவலையைத் தெரிவித்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்று வருகின்ற அரசியல் கொலைகளின் ஒரு கட்டமாகவே இந்தக் கொலையையும் நோக்கவேண்டியுள்ளது. சிவராமின் கொலையானது அவர் ஊடகவியலாளராக இருந்தும், தமது சுதந்திரமான கருத்துக்களை வெளியிட்டமை காரணமாகவே மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே, ஊடகத்துறையில் அரசியல் கொலைகளைத் தடுப்பதற்கு அனைவரும் ஒன்றுபட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

### தேசிய ஊடக அமைப்பின் அமைப்பாளர் காரியவசம்

சிவராமின் கருத்துக்களுக்கு உரிய இடம் அளிக்கப்படவேண்டியது அவசியமானதாகும். அத்துடன் இவர் தெரிவித்த கருத்துக்களுக்கு மதிப்புத் தரவேண்டியது அவசியமாகும். இதற்காக கொலை ஒரு காரணமாக அமைய முடியாது. ஊடகவியலாளர் ஒருவருக்குள்ள சுதந்திரம் இவ்வாறான கொலைகள் மூலமாக அழிக்கப்படுகின்றன எனத் தெரிவித்துள்ளார்.

### தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத் தலைவர் அனந்த பாலகிட்ணர்

சிவராமின் கொலைக்கான காரணகர்த்தாக்களை அரசாங்கம் உடனடியாக கைதுசெய்ய வேண்டும்.

### டெய்லிமிரர் பிரதம ஆசிரியர் லலித் அழககோன்

சிவராம் எதனையும் வெளிப்படையாகப் பேசுபவர். அவர் ஊடக சுதந்திரத்திற்குள் நின்று கொண்டே தனது கருத்துக்களை தெரிவித்து வந்தார். இந்தக் கொலையை யார் செய்தாலும் அதனை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன். அவர் சிறந்த அரசியல் ஆய்வாளர். இதனால் மிகப்பெரிய வாசகர்களை வைத்திருந்தார். நாம் நல்லதொரு எழுத்தாளரை இழந்து விட்டோம் எனத் தெரிவித்தார்.

# தமிழ்த்தேசியத்திற்கு விடுக்கப்பட்ட சவாலே சிவராமின் படுகொலை

## மாவை.சேனாதிராஜா எம்.பி.

மட்டக்களப்பில் ஊடகவியலாளர் ஜி.நடேசன் கொலைசெய்யப்பட்ட பின்னர் டி.சிவராம் கொலை செய்யப்பட்டமையானது ஊடகத்துறைக்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கை மட்டுமல்லாது, தமிழ்த்தேசியத்திற்கு விடுக்கப்பட்ட சவாலென, நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராஜா தனது கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளார். அவர் தனது அறிக்கையில் –

ஊடகவியலாளர் சிவராம் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டார் என்ற செய்தி ஊடகத்துறையினருக்கு மட்டுமல்லாது, எமக்கும் அதிர்ச்சியைத் தந்துள்ளது.

அரசினதும், இராணுவத்தினதும், விடுதலைப்புலிகளுக்கெதிரான நிலைப்பாடுகளை விமர்சனம் செய்து வந்தது மட்டுமல்லாது, இராணுவத்தினதும், விடுதலைப்புலிகளதும் பலம், புலனாய்வு தொடர்பான கண்ணோட்டத்தினை தமிழ், ஆங்கில மற்றும் சர்வதேச ஊடகங்களினூடாக வெளிப்படுத்தி வந்தார். இதனால், இராணுவ, புலனாய்வுத்துறையினரின் கண்காணிப்பிற்கும், துன்புறுத்தல்களுக்கும் உள்ளானார்.

ஊடகவியலாளர் சிவராம் கொலை செய்யப்பட்டதனை வன்மையாகக் கண்டிப்பதுடன், அரசாங்கம் இதற்கான பொறுப்பை தட்டிக் கழிக்க முடியாதெனத் தெரிவித்துள்ளார்.

# தமிழ் மக்களின் விடுதலையை காணத் துடித்தவர் சிவராம்

## ஜெயானந்த மூர்த்தி எம்.பி.

தமிழ்த்தேசியத்தை நேசித்த தமிழீழ மக்களின் விடுதலையைக் காணத் துடித்த தராக்கி என்ற தர்மரத்தினம் சிவராம் கபடத்தனமாகக் கடத்தப்பட்டு நாடாளுமன்றம் அமைந்துள்ள உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் வைத்துக் கோழைத்தனமாகக் கொல்லப்பட்டுள்ளார். இக்கொலைக்கு யார் காரணமாக இருந்தாலும் அரசாங்கம் பொறுப்பேற்று இதற்குப் பதில் சொல்லியே ஆகவேண்டும்.

இவ்வாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி. எஸ்.ஜெயானந்தமூர்த்தி, சிவராமின் படுகொலைக்கு இரங்கல் தெரிவித்து விடுத்துள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

உலகறிந்த ஊடகவியலாளர் சிவராமைப் படுகொலை செய்ததன் மூலம் தமிழீழ மக்களின் விடுதலை உணர்வை மழுங்கடிக்க முடியாது. சிவராமின் எழுத்தின் வலிமையையும் மறைக்க முடியாது. தமிழ்த்தேசியத்தை ஊடகவியலாளர்களைக் கொல்வதன் மூலம் இல்லாமல் செய்துவிட முடியாது. சிவராமின் கொலை இலங்கை அரசையும், புலனாய்வுத் துறையையும் உலகுக்குத் தெரியப்படுத்தியுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஊடக சுதந்திரத்துக்கு எதிராக அரச பிரமுகர்கள் செயற்படுகின்றனர்

## ஜயலத் ஜயவர்த்தன எம்.பி.

ஊடகவியலாளர் சிவராம் கடத்தப்பட்டு மிலேச்சத்தனமான முறையில் கொலை செய்யப்பட்டமையானது மிகவும் கண்டிக்கத்தக்கதென ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்துள்ளார். அவர் தனது கண்டன அறிக்கையில் –

சிவராமை பம்பலப்பிட்டியவில் வைத்து கடத்தியது யார்? அவர்கள் வந்த வாகனம் யாருடையது? இந்தச் சம்பவத்தின் பின்னணி யாது? என்ற கேள்விகளுக்கு அரசாங்கம் கண்டிப்பாக பதில்தேடவேண்டும்.

நிமலராஜன் கொலையை மூடி மறைத்து அது தொடர்பாக சரியான பரிசீலனைகள் மேற்கொள்ளப்படவில்லை. இந்தக் கொலையையும், அவ்வாறு விட்டுவிட அரசாங்கத்தை இடமளிக்க முடியாது.

சுதந்திமாக, தன்னிச்சையாக செயற்படும் ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்படுவது மிகவும் வேதனைக்குரிய, கண்டிக்கத்தக்க விடயமாகும். இதனால் சுதந்திர ஊடகத்துறை பின்னடையலாம்.

கடந்த சில மாதங்களில் ஜே.வி.பியின் பகிரங்க கண்டனங்களுக்கு சிவராம் உட்பட்டிருந்தார். ஜே.வி.பியின் தலைவர்கள் பொதுக்கூட்டங்களில் பகிரங்கமாகச் சாடினர். ஜனாதிபதி சந்திரிகா, அமைச்சர் மங்கள சமரவீர, அமைச்சர் அனுரா பண்டாரநாயக்கா உட்பட்ட குழுவினர் சுதந்திர ஊடகத்துறைக்கு எதிராக பெரும் திட்டத்தை தீட்டியுள்ளனர். ஜே.வி.பியினர் அவர்களது ஆரம்ப காலத்தில் நடைமுறைப்படுத்தியது போல ஊடகத்துறைக்கு எதிராக செயற்பட முனைந்துள்ளனர். எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
*The Leading Daily of Tamils' Homeland*

# துறைமுகக் கடலில் கடற்படை பஸ் வீழ்ந்தது!

## சாரதி உயிரிழந்தார்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை உயர்பாதுகாப்பு வலயப் பகுதியில் கடற்படையினரின் பஸ், தவறுதலாகக் கடலில் விழுந்ததில் அதனைச் செலுத்தின் சென்ற கடற்படைச் சாரதி உயிரிழந்தார்.

காங்கேசன்துறை பகுதியில் கடற்படையினரால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பாதுகாப்புமிக்க துறைமுகப் பகுதியில் கடந்த புதன்கிழமை காலை 8.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் பண்டாரவளையைச் சேர்ந்த டி.எம்.ஜே.பி.குணதிலக (வயது 24) என்ற சிப்பாயே உயிரிழந்தவராவார்.

விடுமுறையில் சென்ற படையினரை ஏற்றிச்சென்ற குறித்த பஸ் - அவர்களை இறக்கிவிட்டு திரும்பும் வேளையில் கடலுக்குள் விழுந்ததாகவும் அவ்வேளை சாரதி உட்பட இரு சிப்பாய்கள் இருந்ததாகவும் பஸ் கடலுக்குள் வீழ்ந்ததையடுத்து சாரதி அந்த இடத்திலேயே உயிரிழந்ததாகவும் மற்றைய சிப்பாய் கடலில் நீந்தித் தப்பி விட்டார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவ இடத்துக்குச் சென்ற மல்லாகம் மாவட்ட நீதிவான் திருமதி இளங்கோவன் - சடலத்தை பிரேத பரிசோதனையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்க அனுமதியளித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கடற்படையினர் - காங்கேசன்துறை பொலிஸாரிடம் முறையிட்டுள்ளனர்.

# குற்றச்சாட்டிலிருந்து அரசு ஒருபோதும் தப்பமுடியாது!

## ஐக்கிய தேசியக் கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

சன நடமாட்டமுள்ள பிரதேசம் ஒன்றிலிருந்து - சிவராம் கடத்திச்செல்லப்பட்டு, கொலை செய்யப்பட்ட குற்றச்சாட்டிலிருந்து அரசாங்கம் ஒருபோதும் தப்பித்துக்கொள்ள முடியாது என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன -

சன நடமாட்டமுள்ள ஒரு பகுதியில் வைத்தே ஊடகவியலாளர் சிவராம் கடத்தப்பட்டு கொலைசெய்யப்பட்டிருக்கிறார். இதுபோன்ற கடத்தல்களையும் கொலையையும் செய்யக்கூடிய ஆட்கள் இருதரப்பினிடம் இருக்கின்றனர்.

அவற்றில் ஒரு தரப்பு விடுதலைப் புலிகள். மற்றைய தரப்பு அரசாங்கம். சிவராம் போன்ற ஒருவரைக் கொலை செய்யவேண்டிய அவசியம் விடுதலைப் புலிகளுக்கு உள்ளதா என்பது கேள்விக்குறியே. ஆனால் - அரசாங்கத்துக்குள் இருக்கும் ஜே.வி.பியினரே இந்தக் கொலையைச் செய்திருக்கின்றனர் எனத் தெரிவித்தார்.

# 13 இந்தியப் பிரஜைகளையும் நாடு கடத்துமாறு உத்தரவு!

மட்டக்களப்பு மாவட்டம் - களுதாவளை மற்றும் குருக்கள்மடம் ஆகிய இடங்களில் கடந்த வியாழக்கிழமை இரவு கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 13 இந்தியப் பிரஜைகளையும் உடனடியாக நாடு கடத்துமாறு மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்தது.

கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக விசா இன்றி - ச ட்டவிரோதமான முறையில் குடும்பங்களுடனும் தனியாகவும் தங்கியிருந்து சீவல் தொழிலில் இவர்கள் ஈடுபட்டு வந்தனர்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த பெரியநாயகம் அந்தோனிசாமி (வயது33) அவரது மனைவி எலிசபெத்ராணி (வயது23), இவர்களது இலங்கையில் பிறந்த குழந்தை கனிஸ்டன் (வயது 1), ஆரோக்கியம் சவரிமுத்து (வயது 40), அவரது மனைவி ஜான்சி (வயது 33), மகள் செலின்மேரி (வயது 13), மகன்மார் செபஸ்ரியன் (வயது 10), செல்வராஜா (வயது 5) மற்றும் அந்தோனிசாமிக் கண்ணு (வயது 33), அருளானந்தம் குழந்தை (வயது 40), முத்தையா கணேசன் (வயது 57), மருதன் சேதுமாரி (வயது 41), ஆரோக்கியம் சேவயர் (வயது 40) ஆகியோரே குறிப்பிட்ட இந்தியப் பிரஜைகளாவர்.

குறிப்பிட்ட இந்தியப் பிரஜைகளை குடியகல்வு, குடிவரவுத் திணைக்கள அதிகாரிகள் ஊடாக நாடு கடத்துமாறு மாவட்ட மேலதிக நீதிபதி எம்.எச்.அஜ்மீர் உத்தரவிட்டார்.

எதிர்வரும் 2 ஆம் திகதி - இவர்களை சட்டவிரோத குடியேற்றக்காரர் தடுப்புமுகாமில் ஒப்படைத்து, இதுபற்றிய அறிக்கையை 9 ஆம் திகதி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு சிறைச்சாலை அத்தியட்சகருக்கு அந்த உத்தரவில் நீதிபதி குறிப்பிட்டுள்ளார்.

# தென்மராட்சி அபிவிருத்தி குறித்து சாவகச்சேரியில் உயர் மட்ட மாநாடு!

யுத்த நடவடிக்கையின்போது அழிவடைந்த தென்மராட்சி பிரதேசத்தை மீளகட்டியெழுப்புவது தொடர்பான உயர்மட்ட மாநாடு நேற்று சாவகச்சேரி நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.

நகரசபை செயலாளர் திருமதி கு. ஆறுமுகம் தலைமையில் இடம்பெற்ற இந்த உயர்மட்ட மாநாட்டில், முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் ஜப்பான் நாட்டின் இலங்கைக்கான நிதியுதவி அமைப்பின் விசேட ஆலோசகருமான ஒஸ்ரின் பெர்னாண்டோ மற்றும் சிறிசேன, தென்மராட்சி பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன், உள்ளுராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா, நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ், நகரசபை வேலைப்பகுதி அத்தியட்சகர் செல்வரத்தினம், உள்ளூராட்சி உதவியாளர் திருமதி வ.மகாலிங்கம், சுற்றுச்சூழல் அதிகாரசபை அலுவலர் திருக்குமரன் உள்ளிட்ட திணைக்களத் தலைவர்கள் கலந்துகொண்டனர்.

இந்த மாநாட்டில் யுத்த நடவடிக்கையின்போது சேதமடைந்த தென்மராட்சி பிரதேசத்தினை மீளக் கட்டியெழுப்புவது தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டதுடன், இந்த ஆண்டு மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது. அத்துடன், தற்போது நடைபெற்றுவரும் மீள்கட்டுமானப் பணிகளையும் ஒஸ்ரின் பெர்னாண்டோ தலைமையிலான குழுவினர் நேரில் சென்று பார்வையிட்டனர். (29)

# சிவராமின் கொலையை அரசும் கண்டிக்கிறதாம்

ஊடகவியலாளர் தர்மரத்தினம் சிவராமின் படுகொலையை அரசாங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையில இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர் சிவராமின் படுகொலையானது பல வருடங்களாகத் தொடரும் கொலைகளில் மற்றுமொன்றாகும். மிக அண்மையில் கிழக்கில் பிரதேச செயலாளர் ஒருவர் கொல்லப்பட்டமை, கல்கிசை பொலிஸ் பிரிவின் பயங்கரவாத தடுப்புப் பிரிவின் இன்ஸ்பெக்டர் ஜெயரட்ணம் கடத்தப்பட்ட சம்பவங்களின் தொடர்ச்சியே இந்தக் கொலையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஊடகவியலாளர் தர்மரத்தினம் சிவராமின் கொலையைக் கண்டித்துள்ளார். அரசாங்கத்தின் சமாதான நடவடிக்கைகளைக் குழப்பும் சக்திகளே இந்தக் கொலையைச் செய்திருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

சிரேஷ்ட தமிழ் ஊடகவியலாளர் சிவராமின் படுகொலை குறித்த விசாரணைகளை மேற்கொள்வதற்காக பல புலனாய்வுக் குழுக்கள் நியமிக்கப்பட்டிருப்பதாக பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு ப... பலப்பிட்டியில் வைத்து இனந்தெரி... தோரால் கடத்தப்பட்ட சிவராமி... கொலைச் சம்பவம் தொடர்பான... ரணைகளை மேற்கொள்ள புல... வுக் குழுக்கள் நியமிக்கப்பட்டி... துடன் இரு விசேட பொலிஸ் ... களும் விசாரணைகளை மேற்... வுள்ளதாக பொலிஸ் மா அதிப... பிட்டார்.

சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா... ஒருவரின் கீழ் இந்த விசா... நடவடிக்கைகள் நடைபெற வு...

# துணிந்து உண்மையை எழுதுவோ... அரசாங்கம் அழித்துவருகிறது

## எல்லைகள் அற்ற ஊடகவியலாளர் ச...

(பாரிஸ்)

பிரான்சை தளமாகக் கொண்ட சர்வதேச ஊடகவியலாளர்களின் பலம்வாய்ந்த சங்கமான எல்லைகள் அற்ற ஊடகவியலாளர் சங்கம் -சிவராமின் படுகொலையை வன்மையாகக்கண்டித்துள்ளது.

கொழும்பு பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக கடத்தப்பட்டு பின்னர் படுகொலை செய்யப்பட்ட சிவராம் ஒரு மிகத் துணிச்சலான ஊடகவியலாளர். அவரது பாரபட்சமற்ற அரசியல் மற்றும் இராணுவ எழுத்துப் பணியே அவரது படுகொலைக்குக் காரணம் என்று தாம் நம்புவதாக இந்தச் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த 2004 ஆம் ஆண்டு மே மாதம் இந்த சர்வதேச அமைப்பிடமும் தனக்கு எழுந்துள்ள உயிராபத்தைச் சுட்டிக்காட்டியதாகக் குறிப்பிட்டுள்ள இந்த சங்கம் -

அவரது வீட்டை பொலிஸார் சல்லடைபோட்டுத் தேடிய பின்னர் அவரது உயிருக்கு எந்த உறுதியும் இல்லை என்று அவர் நேரடியாகவே தங்களிடம் முறையிட்டதாகவும் குறிப்பிட்டுள்ளது.

விடுதலைப்புலிகளால் விலத்தப்பட்ட கருணா குழுவினரை அரச உளவுப்படையினர் தங்களுடன் இணைத்துக்கொண்டு செயற்பட ஆரம்பித்தபோது தனது துணிச்சலான எழுத்துக்களால் அரசியல் மற்றும் இராணுவ இரகசியங்களை நேர்மையாக வெளிக்கொணர்ந்த ஒரு எழுத்தாளர் சிவராம் என்று சுட்டிக்காட்டியுள்ள அந்த அறிக்கையில் -

தனது நாட்டின் எழுத்தாளர்களைப் பாதுகாக்கத் தவறிய அரசின் பாராமுகத்தையும் உதாசீனத்தையும் கண்டித்துள்ளது.

அரசு - தனக்குச் சார்பா... வியலாளர்களுக்கு மட்டும் உ... காப்பு வழங்குவதுடன், அவ... நியாயமான செயற்பாடுகள... தவிர்த்தும் வருகின்ற அதேவே... துணிந்து உண்மையை எழுது... பல ஊடகவியலாளர்களை திட... அழிக்கும் நடவடிக்கைகள... தொடர்ந்து முன்னெடுத்து வரு...

எழுத்தாளர் சிவராம் ... ஒரு திட்டமிட்டு முன்னெடுக்க... அப்பட்டமான படுகொலை. இ... குக் கிடைத்து ஒரு சாவுமணி.

சிவராம் ஒரு மிகச் சிறந்த ... வியலாளர்என்பதால் அவ... கொலை செய்யப்பட்டார் என்... நம்புவதாக அந்த அறிக்கை... மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள... தங்களது ஆழ்ந்த அனுதாபங்... யும் அவரது குடும்பத்தினருக்... நண்பர்களுக்கும், ஊடக உலக... கும் தெரிவித்துள்ளது.

### சிவராம்...

மையாக உழைக்க வேண்டும். இந்தப் படுகொலை - ஜனநாயகத்தின் மீதான பலமான தாக்குதல். சமாதானத்தையும் ஜனநாயகத்தையும் பின்பற்றுவதாகக் கூறுபவர்கள் இத்தகைய தனிமனித பேச்சுச் சுதந்திரத்தை பாதுகாப்பதற்கும் உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும்.

ஊடகவியலாளர் சிவராமின் படுகொலையை வன்மையாகக் கண்டிக்கும் அதேவேளை - அவரது கொலை மூலம் சமாதான முயற்சிகள் பாதிப்படையாதென தாம் நம்புவதாகவும் அத்துடன் - சிவராமின் குடும்பத்தினருக்கும் அவரது நண்பர்களுக்கும் தமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவிப்பதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கடத்தப்பட்ட...

ஊடகவியலாளர் தர்மரத்தினம் சிவராமின் பூதவுடல் பிரேத பரிசோதனைகள் முடிவுற்றபின் றேமன் மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு இரவு 8 மணியளவில் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

சிவராமின் குடும்ப உறவினர்கள் பலர் வெளிநாடுகளில் இருப்பதால் அவரது இறுதிச் சடங்கு பற்றி இதுவரை தீர்மானிக்கப்படவில்லை. எனினும், தான் எங்கு மரணித்தாலும் மட்டக்களப்பிலேயே தனது உடல் தகனம் செய்யப்படவேண்டும் என்ற அவரது விருப்பத்தின்படி மட்டக்களப்பிலேயே இறுதிச்சடங்கு நடைபெறுமென்றும் நாளை இரத்மலானையிலிருந்து மட்டக்களப்புக்கு சடலம் எடுத்துச்செல்லப்பட்டு, திங்கட்கிழமை இறுதிச்சடங்கு நடைபெறும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

### யாழ்.பஸ்...

யத்தின் முன்பாக ஒன்றுகூடும் ... கையாளர்கள் காலை 11.30 ... வரை எதிர்ப்புப் போராட்டம் ... ஈடுபடவுள்ளனர். இந்தப் போ... தில் யாழ்.மாவட்டத்தில் உள்... கையாளர் சங்கங்களின் ... வர்கள், பத்திரிகை நிறுவன... ஊழியர்கள், சுதந்திர ஊட... ளர்கள் பங்குகொள்ளவுள்...

### தேசியத்துக்காக...

டி.சிவராம் என்ற பெயரில் இவர் இராணுவ ஆய்வுக் கட்டுரைகளை எழுதியிருந்தார்.

தமிழ்நெற் இணையத் தளத்தின் ஆசிரியகுழு உறுப்பினராக இருந்த சிவராம் - நிதர்சனம் இணையத் தளத்தின் பிரதம செய்தி ஆசிரியராகவும் பணியாற்றினார்.

ஊடகங்கள் மூலம் தமிழ்த் தேசியத்துக்கு ஆதரவான கருத்துக்களை வெளியிட்டு வந்த இவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கத்துக்கு முக்கிய பங்கு வகித்தவ...

கிழக்குப் பிரதேச... கருணா தூண்டிவிட்ட... தேசியத்துக்கு ஆத... கொடுத்து வந்தவர். த... த் தே... துக்கு ஆதரவாக இவர் செய... வந்ததால், தமிழ் விரோத சக்தி... இராணுவப் புலனாய்வுத்து... ரும் இவரை அச் சுறுத்தி வந்...

இந்தநிலையிலேயே இவர்... திச் செல்லப்பட்டு படுகொலை செ... பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

### ஊடகவியலாளர் சிவராம்...

யையும் எழுத்தையும் முன்வைத்து வந்தவர்.

சிங்களப் பேரினவாதிகளிடமிருந்து தமிழரின் இனப்பிரச்சினைக்கான எத்தகைய தீர்வையும் ஒருபோதும் எதிர்பார்க்க முடியாது என்ற வலுவான கருத்தை தனது அனுபவத்தின் வழியாக வலியுறுத்திவந்தவர் சிவராம். அத்துடன், தமிழ்த் தேசியத்தைக் கூர்மைப்படுத்த வேண்டும். அதனைப் பலப்படுத்த வேண்டும் என்றும் உயரிய நோக்கோடு வாழ்ந்தவர்.

தமிழ்த் தேசிய பலத்தோடு வளர்த்துச் செல்லப்படவேண்டும் எனக்கூறி, தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் தலைமையை ஆதரித்தவர் டி.சிவராம்.

சமாதானப் பேச்சுவார்த்தை குறித்து தெளிவற்ற முறையில் கற்பிதங்களை மக்களிடம் உருவாக்கும் போக்கு தமிழ் ஊடகத்துறையின் தவறாகும் எனச் சுட்டிக்காட்டியவர். அதேவேளையில் சமாதானத்தை தமிழர்களுக்கு ஒரு பொறியாக மாற்றமுனையும் சந்தர்ப்பங்களை அம்பலப்படுத்த வேண்டும். அதுவே தமிழ் ஊடகங்களின் இன்றைய பணியென்றும் சொல்லிவந்தவர்.

தமிழ் ஊடகவியலாளர்கள் தமிழை நவீன தகவல் தொழில் நுட்பத்திலும், தொடர்பாடலிலும் வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று சிவராம் தமிழ் ஊடகவியலாளர்கள் மத்தியில் வலியுறுத்தி வந்தார். தமிழ் உடகவியலாளர்களைப் பொறுத்த வரையில் சிவராம் ஒரு நல்ல தோழமையாளனாக பத்திரிகைத் துறையில் பலருக்கும் முன்னோடியாளனாக இருந்து ஊடகத் துறையின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டிருக்கிறார்.

எப்போதும் பக்கச்சார்புகள் இல்லாமல் தனது விமர்சனங்களை முன்வைத்து வந்த நல்லதொரு பண்பாளர் சிவராம். கொழும்பில் கொலை மிரட்டல்கள், குடியிருப்பதற்கான அச்சுறுத்தல்கள் எனத் தொல்லைகள் தொடர்ந்தபோதும் அவற்றைக் கண்டு பின்வாங்காமல் சிங்களப் பேரினவாதத்தை அம்பலப்படுத்தி வந்தவர்.

நிமலராஜனையோ, நடேசனையோ கொல்வதன் மூலம் தமிழ் மக்களின் போராட்டக் கருத்தினை மழுங்கடித்து விட முடியாது என்பதை கொலையாளர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று தனக்கு வரக்கூடிய அபாயத்தை ஏற்கனவே உணர்ந்து கூறிவந்தவர்.

ஆனாலும், தனது கருத்துக்களையோ, நிலைப்பாட்டினையோ தளர்வேதுமில்லாமலே இறுதிவரை உறுதியுடன் தொடர்ந்து வந்தார். தன... குடும்பம் தனது சுயபாதுகாப்பு என்... வற்றைக் கூட பெரிதெனக் கருதாம... ஒரு நல்ல புகழ் வாய்ந்த தமிழ் ஊட... வியலாளராக உழைத்து வந்த... சிவராம்.

ஊடகவியலாளர் சிவராம் ... னவே பல தடவைகள் இராணுவ... னாய்வுத்துறையின் கொலை ... டல்களை எதிர்நோக்கியுள்ளார். ... ரது கொழும்பு இல்லமும் சோத... குள்ளாகியது. இக்கொலைய... கொழும்பின் உயர் பாதுகாப்பு... குள் நடைபெற்றுள்ளது. எனவே... தக்கொலைக்கு அரசும் அதன் ... களுமே பொறுப்பாகின்றன.

சிவராமின் உறுதியையும் அவரு... டைய கருத்து நிலைப்பாட்டனையும் அவருடைய விரிந்த செயல்களை... பொறுத்துக் கொள்ளமுடியாத சக்தி... இன்று அவரைக் கடத்திக் கொ... ருக்கின்றன.

படுகொலையில் சிவராம் ... களை இழந்து நிற்கும் அ... மனைவி, பிள்ளைகள் மற்றும் ... பத்தினருக்கு எமது ஆறுதலைத் ... விக்கிறோம். அவர்களுடைய து... நாமும் பங்கெடுத்துக்கொள்கி... எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 30.04.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்...

# தமிழ் மக்களின் அபிலாஷைகளை சர்வதேசத்துக்கு எடுத்துச்சொல்வோம்

## மேநாள் அறைகூவலில் பொது அமைப்புக்களின் ஒன்றியம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தேச மக்களது அபிலாஷைகள் அனைத்துலகின் கவனத்துக்கு செல்வதுடன், எமது போராட்டத்தின் நியாயப்பாடுகள் குறித்து அனைத்துலகமும் தெளிவுற வேண்டுமென்ற இவ்வாண்டின் மே நாளின் இலக்குடன் அனைவரும் தமிழ்த் தேசிய உழைப்பாளர் உரிமை உயர ஒன்றிணைவோம் எனத் தெரிவித்து யாழ்.மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் மே தின அழைப்பை விடுத்துள்ளது. இதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

2005 ஆம் ஆண்டில் தமிழ் மக்கள் அனைவராலும் முன்னெடுக்கப்படும் உழைப்பாளர் நாளாகிய மே நாளின் தொனிப்பொருள் - தமிழ்த் தேசிய உழைப்பாளர் உரிமை உயர ஒன்றிணைவோம் என்பதாகும்.

தமிழ்த்தேசத்தின் உழைப்பாளர் விடிவும், வாழ்நிலை மேன்மையடைதலும் தமிழீழ தேசத்தின் விடுதலையுடன் பின்னிப் பிணைந்ததாகும். ஒடுக்குதலும், சுரண்டலும் அது எந்த வகையினதாக இருந்தாலும் மெய்யான மனித குலத்தின் விடிவுக்கு பெரும் தடையாகவே உள்ளன. ஒடுக்குதலுக்கும், சுரண்டுதலுக்கும் எதிரான போராட்டங்கள் என்றுமே ஓய்வதில்லை. தொடர்கின்றன. இவையிரண்டும் ஒவ்வொரு வரலாற்றுக் கட்டத்திலும் புதுப்புது வடிவங்களெடுக்கின்றன. தேய்வதில்லை.

விடிவுக்கான போராட்டங்களும் அந்தந்த வரலாற்றுக் கட்டங்களுக்கேற்ப புதிய வடிவங்களெடுக்கின்றன. அரசியல், இராணுவ, சமூக, பண்பாட்டு, பொருளாதார பாய்ச்சல்களுடன் சமரசத்துக்கு ஆட்படாது பரிணாம வளர்ச்சி எய்துகின்றன.

விடுதலையும், சமூக அமைதியும் நிலைநாட்டப்படவேண்டும் என்பதிலேயே எமது தேசிய விடுதலைப் போராட்டம் நிலைகொண்டுள்ளது. தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டமானது தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையில் அதன் பேராற்றல் மிக்க வழிகாட்டலில் வெற்றிப் பாதையில் வீறுடன் நடைபோடுகிறது.

வெறும் குறுகிய பேரினவாத அரசியல் நோக்கங்களுக்காக உழைக்கும் வர்க்கத்தின் வாழ்வுரிமைகளை கால்களின் கீழ் போட்டு துவம்சம் செய்கின்றனர்.

உழைக்கும் வர்க்கத் தினர் தமது அரசியலாரின் நயவஞ்சகப் போக்கைப் புரிந்துகொள்வர் என்ற எதிர்பார்ப்பும் எமக்குண்டு. தமிழீழ தேசத்தின் உருவாக்கத்திலேயே, சிங்கள தேச உழைக்கும் வர்க்கத்தினரின் அரசியல், சமூக புத்துயிர்ப்பும் உள்ளது.

எமது தேசிய விடுதலைப் போராட்டமானது மனித மேன்மையும், மனித உரிமைகளும் பேணப்படவேண்டும், புதிய மனிதன் உருவாக வேண்டும் என்ற உயரிய மனித வேட்கையை உள்ளார்ந்த விசைகளாகக் கொண்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மே தின நிகழ்வுகள் நாளை பிற்பகல் 2 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றலில் ஆரம்பமாகி, பொதுக்கூட்டம் நடைபெறவுள்ள யாழ். பல்கலைக் கழக மைதானத்தில் நிறைவுபெறும்.

# ஐ.ஓ.எம் நிறுவனத்தினரால் 100 குடும்பங்களுக்கு உதவி

(யாழ்ப்பாணம்)

புலம்பெயர்ந்தவர்களுக்கான சர்வதேச நிறுவனத்தினரால் இந்தியாவிலிருந்து மீள்குடியமர்ந்த 100 குடும்பங்களுக்கு தொழில்சார் உபகரணங்கள் இந்த மாதம் வழங்கப்பட்டுள்ளன.

இந்த மாதம் 21 ஆம் திகதி கோப்பாய் பிரதேசத்தில் 4 குடும்பங்களுக்கும், பருத்தித்துறை பிரதேசத்தில் 21 குடும்பங்களுக்கும், நல்லூர் பிரதேசத்தில் 2 குடும்பங்களுக்கும், உடுவில் பிரதேசத்தில் 2 குடும்பங்களுக்கும், 23 ஆம் திகதி மண்டைதீவு பிரதேசத்தில் 2 குடும்பங்களுக்கும், 25 ஆம் திகதி யாழ்ப்பாணப் பிரதேசத்தில் 18 குடும்பங்களுக்கும் -

வேலணை பிரதேசத்தில் 9 குடும்பங்களுக்கும், ஊர்காவற்துறை பிரதேசத்தில் 3 குடும்பங்களுக்கும், 26 ஆம் திகதி காரைநகர் பிரதேசத்தில் 2 குடும்பங்களுக்கும், மருதங்கேணி பிரதேசத்தில் 4 குடும்பங்களுக்கும், சங்கானை பிரதேசத்தில் 4 குடும்பங்களுக்கும், சண்டிலிப்பாய் பிரதேசத்தில் 2 குடும்பங்களுக்குமாக மொத்தம் 106 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(55)

# சட்டத்துறை விரிவுரைகள் மே 2 ஆம் திகதி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் சட்டத்துறை விரிவுரைகள் எதிர்வரும் மே மாதம் 2 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

ஆரம்பிக்கப்படவுள்ள சட்டத்துறை கலைப்பீடத்தில் ஒரு துறையாக ஆரம்பத்தில் இருக்குமென்றும், எதிர்காலத்தில் சட்டபீடமாக மாற்றப்படுமென்றும் தெரியவருகிறது.

சட்டத்துறைக்கு ம.சுதர்சன், சி. விக்னேஸ்வரி ஆகியோர் விரிவுரையாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

2004/2005 கல்வியாண்டில் 22 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர். சட்டத்துறையின் போதனா மொழி ஆங்கிலமாக அமையும்.

எதிர்வரும் மே மாதம் 2 ஆம் திகதி முற்பகல் 9.30 மணிக்கு ஆரம்பித்துவைக்கப்படவுள்ள சட்டத்துறையின் அங்குரார்ப்பண நிகழ்வுகள் துணைவேந்தர் பேராசிரியர் எஸ். மோகனதாஸ் தலைமையில் இடம்பெறும்.

இந்த ஆரம்ப விழாவுக்கு கௌரவ விருந்தினர்களாக கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீடாதிபதி ந.செல்வகுமாரன், சட்டக்கல்லூரி அதிபர் கலாநிதி எச்.ஜே.எவ்.சில்வா, கொழும்பு பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் தீபிகா உடகம, கொழும்பு பல்கலைக்கழக சட்டபீட சிரேஷ்ட விரிவுரையாளர் வி.ரி.தமிழ்மாறன், யாழ். சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி சாந்தா அபிமன்னசிங்கம் ஆகியோர் அழைக்கப்பட்டுள்ளனர்.

கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா. சிவசந்திரனின் வரவேற்புரையைத் தொடர்ந்து, துணைவேந்தரின் தலைமையுரை, கௌரவ விருந்தினர்களின் உரை, சிரேஷ்ட மாணவ ஆலோசகர் உரை என்பன இடம்பெறும். நன்றியுரையை சட்டத்துறை விரிவுரையாளர் சுதர்சன் நிகழ்த்துவார்.

# சாவகச்சேரிக்கான குடிநீர் விநியோகம் அடுத்த மாத நடுப்பகுதியில் ஆரம்பம்!

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கான நகரசபையின் நீர் விநியோகத் திட்டம் – அடுத்த மாத நடுப்பகுதிக்குள் மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துவருவதாகவும், இவை சரிவரும் பட்சத்தில் அந்தக் காலப்பகுதிக்குள் குடிநீர் விநியோகம் மேற்கொள்ளமுடியுமெனத் தாம் எதிர்பார்ப்பதாகவும் சாவகச்சேரி நகர சபை ஆணையாளர் தெரிவித்தார்.

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் மேற்கொள்ளும் நகரசபையின் திட்டத்துக்கென அண்மையில் நிகொட் நிறுவனத்தால் 'சாவகச்சேரி நகரசபைக்கு பவுசர் ஒன்று அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது. அத்துடன் நகர சபை வளாகத்தில் குடிநீர் விநியோகத்துக்கென தண்ணீர்த் தாங்கியும் அமைக்கப்பட்டுள்ளது.

தற்போது குடிநீர் விநியோக நடவடிக்கைகளுக்கென உழவு இயந்திரம் ஒன்று அவசியமானதாகவும், சாவகச்சேரி நகரசபையிடம் தற்போதைய நிலையில் உழவு இயந்திரம் இல்லாதபடியால் அதைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்து வருவதாகவும், இந்த வேலையும் மற்றும் நீர் விநியோகத்துக்கான ஏனைய வேலைகளும் பூர்த்தி செய்யப்பட்டு, அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னதாக நீர் விநியோகம் மேற்கொள்ள முடியும் என எதிர்பார்ப்பதாக ஆணையாளர் தெரிவித்தார்.

சாவகச்சேரி நகரசபைக்கு குடிநீர் வழங்கும்பொருட்டு, சாவகச்சேரி நகரிலிருந்து 1 கிலோமீற்றர் பகுதிக்குள் குடிநீர்க் குழாய்கள் பொருத்தப்பட்டுள்ளன.

அவற்றிலிருந்து நகருக்கு அருகாமையிலுள்ள இடங்களுக்கு நீர் விநியோகம் மேற்கொள்ளப்படுமெனவும், நகரசபை எல்லைக்குட்பட்ட ஏனைய கு ண்ணீர் தட்டுப்பாடான இடங்களுக்கு பவுசர் மூலம் நீர் விநியோகம் மேற்கொள்ளப்படும் எனவும் ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

# புனரமைக்கப்பட்ட வெட்டுக்களிக்குளம் கிராம அபிவிருத்தி சங்கத்திடம் ஒப்படைப்பு

(நெடுந்தீவு)

நியாப் I திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டுள்ள வெட்டுக்களிக் குளம் பராமரிப்புக்கானதும், பாதுகாப்புக்குமான பொறுப்பு நெடுந்தீவு மத்தி, மேற்கு கிராம அபிவிருத்தி சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வெட்டுக்களிக் குளத்தின் புனரமைப்பின் பின்னர் குளத்தை அண்டிய பகுதிகளிலுள்ள பாவனைக் கிணறுகளில் உள்ள குடிநீர் மாதிரிகளை தவணையடிப்படையில் பரிசோதனை செய்வதன் மூலம், இந்தத் திட்டத்தினது பயனைப் பெற முடியும்.

இது தொடர்பாக குடிநீர் மாதிரிகளை நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபரூடாக அனுப்பிவைக்கும் பட்சத்தில், குடிநீர் நிலைமாற்றம் பற்றி அறிய முடியும் என நீர்ப்பாசன பொறியியலாளர் க.கருணாநிதி கடந்த செவ்வாய்க்கிழமை நெடுந்தீவில் இடம்பெற்ற குளம் கையளிப்பு முன்னாயத்த நிகழ்வில் தெரிவித்தார். (113)



சுனாமியால் பாதிக்கப்பட்ட கரைநகர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 272 குடும்பங்களுக்கு வெண்புறா செயற்கை உறுப்பு நிறுவனத்தினால் அண்மையில் உணவல்லா நிவாரணப்பொருட்கள் வழங்கப்கட்டபோது எடுக்கப்பட்ட படம்

# சின்னஞ்சிறு செய்திகள்

## தளபாட வசதியின்றி மாணவர்கள் அவதி

மீசாலை வடக்கில் அமைந்துள்ள அறிவொளி பாலர் பாடசாலையில் 25 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இவர்களுக்கு போதிய தளபாட வசதி எதுவுமின்றி நிலத்தில் இருந்து கல்வி கற்று வருகின்றனர்.

அறிவொளி முன்பள்ளிக்கு நிரந்தர காணி வசதி இருந்தும், கட்டட வசதியின்மையால் சிரமங்களை எதிர்நோக்கவேண்டியுள்ளது. இதற்கு உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அந்தப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (29)

## நெற்செய்கை வீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் நெற்செய்கை பெருமளவு வீழ்ச்சி கண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

1995 ஆம் ஆண்டு இராணுவம் குடாநாட்டை ஆக்கிரமித்த பின்பு பெருமளவான நெல்வயல்கள் கண்ணி வயல்களாக மாற்றப்பட்டும், ஆக்கிரமிக்கப்பட்டும் வந்துள்ளன. இந்த நிலையில் குடாநாட்டின் நெற்செய்கை பெருமளவில் வீழ்ச்சி கண்டுள்ள நிலையில், யாழ்.குடாநாட்டின் நெற்தேவைக்கு வேறு மாவட்டங்களை எதிர்பார்க்கவேண்டியுள்ள நிலை தோன்றியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (14)

## நுளம்புகளின் தொல்லை அதிகரிப்பு

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் சுனாமி அனர்த்தத்தின்பின் என்றுமில்லாதவாறு நுளம்புத் தொல்லை அதிகரித்துள்ளதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நுளம்புகள் சாதாரண நுளம்புகள் போல் அல்லாது, வித்தியாசமான நுளம்புகளாகக் காணப்படுகின்றன.

இதனால் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு, நலன்புரி முகாம்களில் தங்கியிருக்கும் மக்கள் பலத்த நுளம்புத் தொல்லைகளை எதிர்நோக்குவதோடு - மலேரியா, டெங்கு போன்ற நோய்கள் நுளம்புகளால் ஏற்பட வாய்ப்பிருப்பதால் நுளம்புகளை அழிக்க நடவடிக்கை எடுக்குமாறு சுகாதாரப் பிரிவினரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (14)

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மரம் தறித்தலுக்கான அனுமதி வழங்கும் கூட்டம் எதிர்வரும் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில், பிரதேச செயலர் தலைமையில் நடைபெறவுள்ளதாக நல்லூர் பிரதேச செயலகத்தினர் தெரிவித்தனர். (63)

## மே தினத்தை முன்னிட்டு சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

மே தினத்தை முன்னிட்டு பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் ஒழுங்குபடுத்தலில் நடைபெறும் சிரமதான நடவடிக்கையின் ஓர் அங்கமாக யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்கள் ஆகியவற்றில் யாழ்.செயலகத்தின் ஏற்பாட்டில் நேற்றும், இன்றும் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

இதன்போது அலுவலகங்கள் துப்புரவு செய்யப்பட்டு, தேவையற்ற பொருட்கள் அகற்றப்படுகின்றன. அத்துடன் அலுவலக சுற்றாடலும் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

## வீடமைப்புக்கு தெரிவு

(யாழ்ப்பாணம்)

இந்த ஆண்டுக்கான உலகவங்கி வீடமைப்பு திட்டத்தின்கீழ் யாழ். பிரதேச செயலர் பிரிவில் முதல் கட்டமாக நெடுங்குளம் புதிய சோனக தெரு, சோனக தெரு வடக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகள் வீடமைப்புக்கெனத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

## பாலர் முன்பள்ளி கட்டட திறப்புவிழா

கற்கோவளம் - புனிதநகர் குடியிருப்பு பகுதியில் பாலர் முன்பள்ளிக்கான கட்டடமொன்று கடந்த புதன்கிழமையன்று திறந்துவைக்கப்பட்டது.

பாலர் முன்பள்ளிக்கான இந்த தற்காலிக கட்டடத்தை உலக தரிசனம் நிறுவனம் அமைத்துக் கொடுத்துள்ளது.

புனிதநகர் குடியிருப்பைச் சேர்ந்த ந.இராசரத்தினம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - கியூடெக் நிறுவன உதவி அமைப்பாளர் கட்டடத்தை திறந்துவைத்தார். அதிகளவிலான குடியிருப்பு மக்களும், நலன் விரும்பிகளும் இதில் கலந்துகொண்டனர்.

# வைத்திய அதிகாரிகளுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவு!

(நெடுந்தீவு)

நெடுந்தீவு, மருதங்கேணி, அனலைதீவு ஆகிய பிரதேச வைத்தியசாலைகளில் கடமையாற்றும் வைத்திய அதிகாரிகளுக்கு பத்தாயிரம் ரூபா ஊக்குவிப்புக் கொடுப்பனவாக 2005 ஏப்ரல் முதல் வழங்கப்படவுள்ளதாக சுகாதார சேவைகள் மாகாண பிரதிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

குறிப்பிட்ட பிரதேச வைத்தியசாலைகளில் கடமையாற்ற விரும்பும் வைத்தியர்கள் ஒரு மாதத்துக்கு ஒருமுறை இந்த வைத்தியசாலைகளுக்கு மாற்றப்படவுள்ளதால், அவர்கள் கடமையாற்ற விரும்பும் வைத்தியசாலை நிலையங்களை விருப்புரிமை அடிப்படையில் அனுப்பிவைக்குமாறு வைத்தியர்களைக் கேட்டுக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (113)

# போர்ப் பயிற்சி கல்லூரியில் பரிசளிப்பு விழா நிகழ்வுகள்

(கிளிநொச்சி)

ஆனையிறவு வெற்றிச்சமரின் ஐந்தாம் ஆண்டு நிறைவையொட்டியும், தீச்சுவாலை முறியடிப்புச் சமரின் நான்காம் ஆண்டு நிறைவையொட்டியும் கடந்த 22 ஆம் திகதி வெற்றி நிகழ்வுகள் விடுதலைப் புலிகளால் தாயகமெங்கும் மேற்கொள்ளப் பட்டுவந்தன.

இந்த வகையில் போராளிகளுக்கிடையில் நடைபெற்ற போட்டிகளுக்கான பரிசளிப்பு விழா நேற்றுமுன்தினம் பிற்பகல் போரியல் பயிற்சிக் கல்லூரியில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரை தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் ஏற்றிவைத்தார்.

தமிழீழ தேசியக்கொடியை வட போர்முனைக் கட்டளைத்தளபதி கேணல் தீபன் ஏற்றிவைத்தார். அதனைத் தொடர்ந்து படையணிகளுக்கான கொடியினை அந்தந்த படையணித் தளபதிகள் ஏற்றிவைத்தனர்.

ஈகச்சுடரேற்றல், மலர் மாலை அணிவித்தலைத் தொடர்ந்து மண்டப கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. இதில் தலைமையுரை, வரவேற்புரை, சிறப்புரை என்பவற்றுடன் பரிசளிப்பு நிகழ்வுகள், கலை நிகழ்வுகள் என்பன இடம்பெற்றன.

சிறப்புரையை தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நிகழ்த்தினார்.

வெற்றிபெற்ற வீரர்களுக்கான பரிசில்களை தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன், அரசியல் துறை துணைப்பொறுபபாளர் சோ. தங்கன், அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி ஆகியோர் வழங்கி கௌரவித்தனர்.




# குளம் புனரமைக்கப்படாமையால் விவசாய நடவடிக்கைகள் பாதிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - இரணைமடு குளத்தின் கட்டுமானங்கள் மற்றும் வாய்க்கால்கள் பழுதடைந்துள்ள காரணத்தால், விவசாய நடவடிக்கையை திட்டமிட்டவாறு சரிவர மேற்கொள்ள முடியாது இருப்பதாக, கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசன பிரதிப் பணிப்பாளர் வினோதராஜ் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

இந்தவருடம் இரணைமடு குள புனரமைப்பு வேலைகளுக்கு 3 ஆயிரம் மில்லியன் ரூபா பணம் தேவைப்படுகிறது. இதில் ஆயிரம் மில்லியன் ரூபாவை உலகவங்கி நியாப் - 2 திட்டத்தில் வழங்க முன்வந்துள்ளது.

இதேவேளை, குளத்தின் கட்டு மிகவும் பலவீனமாக இருப்பதால், 27 அல்லது 28 அடி தண்ணீர் குளத்துக்குள் வந்ததும் குளத்தை திறந்துவிட வேண்டிய நிலை இருந்துவருகிறது. குளக்கட்டு சீராக இருந்தால் 34 அடி தண்ணீரைத் தேக்கமுடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.







இராமநாதபுரம் கலைச்சுடர் சனசமூக நிலைய திறப்பு விழாவுக்கு பிரதம விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும், நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் சனசமூக நிலைய கட்டடத்தை நாடாவை வெட்டித் திறந்துவைத்து உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

படம் - வே.சீலன்

## சின்னஞ்சிறு செய்திகள்

### அடிக்கல் நாட்டுவிழா

தியாகதீபம் அன்னைபூபதியின் நினைவாக அக்கராயன் பிரதேச டானியல் விளையாட்டு அரங்கில் கலையரங்கு ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இதற்கான அடிக்கல்லை அன்னை பூபதியின் நினைவுதினமான கடந்த 19 ஆம் திகதி, பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் கலைவாணன் நாட்டிவைத்தார்.

இந்த நிகழ்வு சபாரத்தினம் தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் நினைவுரையை பசுபதிப்பிள்ளை, மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் ஆகியோர் நிகழ்த்தினர் தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. (9)

### நூலக வாசகர் வட்ட கூட்டம்

(பூநகரி)

பூநகரி பிரதேச சபையின் பொது நூலக வாசகர் வட்டக்கூட்டம் அண்மையில் நூலக மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வு பூநகரி பிரசேத சன சமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் க.யோகநாதன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனப்பலர் கலந்துகொண்டனர். (9)

### நூலகர் நியமனம்

(கிளிநொச்சி)

கரைச்சி பிரதேச சபையின் பொது நூலகத்துக்கு புதிய நூலகர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நூலகத்தில் இதுவரை காலமும் தற்காலிக நூலகர்களே கடமையாற்றினார்கள்.

தற்போது இந்த நூலகம் தரம் உயர்த்தப்பட்டதையடுத்து - முரசுமோட்டை பொது நூலகத்தில் தற்காலிக நூலகராக கடமையாற்றிய இ. சசிகலா என்பவர் இந்த நூலகத்துக்கு நிரந்தர நூலகராக நியமிக்கப்பட்டுள்ளார். (9)

## இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

### ஏப்ரல் 30

1492 - ஸ்பெயின் நாட்டு அரசால் கிறிஸ்தோபர் கொலம்பஸ் புதிய நாடுகளைக் கண்டறியும் முயற்சியின் அட்மிரலாக நியமிக்கப் பட்டார். இவர் கண்டுபிடிக்கும் நாடுகளுக்கு இவரே ஆலோசகராகவும் இருக்கலாம் என்று கூறப்பட்டது.

1772 - என் குறியீடுகளுடன் கூடிய முகப்புத் தகட்டை கொண்டதான நிறைகளைக் கணிக்கும் இயந்திரத்தை (தராசு) தயாரிப்பதற்கு லண்டனைச் சேர்ந்த ஜோன்சிளெயிஸ் என்பவர் காப்புரிமத்தை பெற்றுக்கொண்டார்.

1789 - அமெரிக்காவின் முதல் ஜனாதிபதியாக ஜோர்ஜ் வொஷிங்டன் பதவியேற்றார். நியூயோர்க் மாநில வேந்தர் ரொபர்ட் ஆர்.லிவிங்ஸ்டன் பதவிப் பிரமாணம் செய்துவைத்தார்.

1812 - அமெரிக்காவின் 18 ஆவது மாநிலமாக லூஸியானா இணைந்து கொண்டது.

1822 - முழுவதும் இரும்பிலான உலகின் முதலாவது நீராவிக்கப்பல் ஆரான் மான்பி பிரிட்டனில் ரோதர்ஹித் என்ற இடத்தில் கட்டி முடிக்கப்பட்டது.

1824 - முதன்முதலாக காற்றடித்த மெத்தை ஸ்கொட்லாந்தில் கட்டி முடிக்கப்பட்டது.

1877 - இந்தியாவிலுள்ள அமிர்தசரஸ் பொற்கோவிலை மின்னல் தாக்கியது. எனினும் இந்தக் கோயிலுக்கோ அல்லது இங்கு பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்தவர்களுக்கோ சேதத்தை விளைவிக்காது, கோயிலின் வடக்கு வாயிலாக நுழைந்த மின்னல் பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்தவர்களது தலைக்கு மேலாகச் சென்று தெற்கு வாயில் வழியாக வெளியேறி மறைந்துவிட்டது.

1879 - எலக்ரோன்கள் எனப்படும் மின்னணுத் துகள்கள் கேம்பிரிட்ஜிலுள்ள காவெண்டிஸ் ஆய்வுகூட இயக்குநரான ஜோசப் தொம்சன் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.

1906 - பஸ்களில் போக்குவரத்து பாதைகளைக் குறிப்பிட இலக்கம் எழுதும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. லண்டனில் இது நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது.

1916 - நீர்மூழ்கிக் கப்பல்கள் மூலம் கண்மூடித்தனமாக தாக்குதல் செய்வதை நிறுத்திக்கொள்வதாக ஜேர்மனி அறிவித்தது

1917 - இந்த மாதம் முதலாம் திகதியிலிருந்து இன்றுவரை முதலாவது உலக யுத்தம் காரணமாக பிரித்தானியாவினது 196 போர்க்கப்பல்களும் 151 விமானங்களும் ஜேர்மனியால் தாக்கியழிக்கப்பட்டன.

1918 - சோவியத் குடியரசாக துர்க்கெஸ்தான் தன்னை பிரகடனம் செய்துகொண்டது.

1919 - ஷாண்டுங் மாகாணத்தின் மீது சீனாவுக்கு உள்ள ஆதிக்க உரிமையை சீனாவிடம் கேட்காமலேயே பாரிஸில் நடந்த மாநாட்டில் வைத்து ஜேர்மனி சீனாவுக்கு மாற்றிக்கொடுத்தது.

1920 - கட்டாய இராணுவ சேவைச் சட்டம் பிரிட்டனில் ரத்துச் செய்யப்பட்டது.

1939 - உலக நாடுகள் பங்குபற்றும் உலக கண்காட்சி நியூயோர்க்கில் அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டால் திறந்துவைக்கப்பட்டது.

1945 - தன்னைத்தானே சுட்டு ஹிட்லரும், மாத்திரையை விழுங்கி அவரது மனைவி இவா பிரெளனும் தற்கொலை செய்துகொண்டனர்.

1947 - நெருப்புக்காய்ச்சலுக்கு (தைபோயிட்) தடுப்பூசி மருந்தைக் கண்டுபிடித்த பிரிட்டிஷ் மருத்துவர் சேர் ஆல்ம்ரோத் எட்வர்ட் ரைட் காலமானார்.

1975 - வடவியட்நாம் படைகள் சைகோன் பிரதேசத்தைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து தென் வியட்நாம் சரணடைந்தது.

1991 - அஸர்பைஜான் - ஆர்மேனியா எல்லைத் தகராறு முற்றி பெருங்கலவரமாக மூண்டது.

1992 - இந்தியா தனது இரண்டாவது ஏவுகணையான அக்னி ஏவுகணையை வெற்றிகரமாக பரீட்சித்து பார்த்தது.

1993 - இந்தியாவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே இடம்பெற்ற ஒப்பந்தத்தை ரஷ்ய நாடாளுமன்றம் அங்கீகரித்தது.

2000 - நெதர்லாந்தில் மகாராணி தினம் கொண்டாடப்பட்டது.

தொகுப்பு - சந்துரு

# புலிகளின் குரல் மல்லாவி மன்ற கலைஞர்களின் ஒன்றுகூடல்!

(கிளிநொச்சி)

புலிகளின்குரல் மல்லாவி மன்ற கலைஞர்களின் ஒன்றுகூடல் - மல்லாவி மன்றத் தலைவர் சுபநேசன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வு - புலிகளின் குரல் மல்லாவி மன்றம் மற்றும் மல்லாவி அரசியல்துறை என்பவற்றின் ஏற்பாட்டில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் சிறப்புரையை மல்லாவி அரசியல்துறை நிர்வாகப் பொறுப்பாளர் புனிதன், புலிகளின்குரல் நிர்வாக இணைப்பாளர் இ.இராஜேஸ்வரன் ஆகியோர் நிகழ்த்தினர். தொடர்ந்து கலைஞர்களின் திறனை வளர்ப்பதற்கு ஏற்ற ஒழுங்குகளைச் செய்வது தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

இந்த நிகழ்வில் மல்லாவி, பாண்டியன்குளம், மாங்குளம் ஆகிய பிரதேசங்களின் கலைஞர்கள் பலரும் கலந்துகொண்டனர்.